Vol. 38 Issue No. 39 2025 Aug 30- Sep 02 Rs. 30
ஆண்டு – 38 இதழ் – 39 2025 ஆக. 30– செப். 02 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN


'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்



## விஜய்க்கு கை கொடுக்குமா தூத்துக்குடி?

த.வெ.க.வை அதிர வைத்த ரிப்போர்ட்!

## பாரில் நடிகை போதை அலப்பறை!



## கலக்கிய ஸ்டாலின்! குலுங்கிய பீகார்!

# ஊடகத்துறைக்குப் புத்துயிர்ப்பு!





செல்போன் வைத்திருப்பவர்கள் எல்லாரும் மீடியாகாரர்கள் என்கிற அளவுக்கு வாட்ஸ்ஆப், ஃபேஸ்புக், ட்விட்டர், யூ-டியூப், ஷார்ட்ஸ், ரீல்ஸ் என்று அனைத்து சமூக ஊடகங்களிலும் செய்திகள் கொட்டிக்கொண்டே இருக்கின்றன. இதில் எது உண்மை, எது பொய் என்பதை கண்டறிவதற்கு முன், ஏதேனும் ஒன்று வைரலாகி விடுகிறது. அதுவே ட்ரெண்டிங் என்று பலரையும் ஈர்ப்ப தால், அதே வழியில் மற்றவர்களும் செல்ல நேரிடுகிறது. ஊடக அறம் என்பது ஏதேனும் ஒன்றின்பின்னே செல்வதல்ல. எது உண்மை என்று தேடிக் கண்டு அடைவதே உண்மையான இதழியலாகும்.

ஊடகத்துறை மீதான அக்கறையுடன், முறையான பயிற்சியும், அனுபவமும் வாய்க்கும்போது, உண்மையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கடினமான பணியைத் துணிவாகவும் எளிதாகவும் மேற்கொள்ள முடியும். அதற்கான கட்டமைப்பை உருவாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு. செய்தி மற்றும் மக்கள்தொடர்புத் துறை வாயிலாக சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் ஆகஸ்ட் 25 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்து குழுமத்தைச் சேர்ந்த ரவி, பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன் ஆகியோர் பொறுப்பு வகிக்கும் இந்த இதழியல் கல்வி நிறுவனத்தின் தொடக்க விழாவில், உண்மையைக் கண்டறியும் துணிச்சல்மிக்க புலனாய்வு இதழியலில் தனி முத்திரை பதித்த நக்கீரனுக்கு சிறப்பு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு பேட்ச்சிலும் 60 மாணவர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு அனைத்து வகை ஊடகங்கள் சார்ந்த பயிற்சிகளையும் வழங்குவதுதான் சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் நோக்கம். முதல் பேட்ச்சில் தேர்வாகியுள்ள 60 பேரில் சென்னை முதல் தென்காசி உள்ளிட்ட பல மாவட்டங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட-மிக பிற்படுத்தப்பட்ட-பட்டியல் இன-பழங்குடிப் பிரிவைச் சேர்ந்த மாணவ மாணவிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாற்றுத் திறனாளி மாணவர்களும் இதில் அடக்கம். மிகக் குறைந்த கட்டணத்தில், திறமையான ஊடகத்துறையினரைக் கொண்டு அச்சு இதழ், தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் உள்ளிட்ட முறையான ஊடகங்கள் குறித்த பயிற்சிகள் இவர்களுக்கு வழங்கப்படும்.



ஊடகத்துறைக்குப் புத்துயிர்ப்பு அளிக்கும் அரசின் இந்த முயற்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மிகுந்த அக்கறையுடன் இருப்பதை தொடக்க விழாவிலேயே காண முடிந்தது. இந்த நிகழ்வில் பங்கேற்ற துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தனது இளைஞரணி சார்பில் கலைஞர் மாணவர் பத்திரிகையாளர் திட்டம் என்பதை ஆகஸ்ட் 7-கலைஞரின் நினைவுநாளன்று முதல்வரும் தி.மு.க தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் அறிவாலயத்தில் தொடங்கினார். அதற்கான இலச்சினையைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உங்கள் நக்கீரனுக்கு கிடைத்தது.

பன்முகத் திறமை கொண்டவர் கலைஞர். அவர் எழுத்தாளர், வசனகர்த்தா, கவிஞர், பாடலாசிரியர், நாடக நடிகர் எனப் பல திறமைகளைக் கொண்டிருந்தாலும் அவரது முதல் அடையாளம் பத்திரிகையாளர் என்பதுதான். இறுதிவரையிலும் அவர் தமிழ்நாட்டின் மூத்த பத்திரிகையாளராக இருந்தவர். அவர் பெயரிலான மாணவப் பத்திரிகையாளர் திட்டம், தமிழ்நாட்டின் அரசியலைப் பற்றிய தெளிவுகொண்ட இளம் பத்திரிகையாளர்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆட்சி சார்பிலும், கட்சி சார்பிலும் ஊடகத் துறைக்குப் புத்துயிர்ப்பு அளிக்கும் முயற்சிகளைத் தொடங்கியுள்ள முதலமைச்சருக்கும் துணை முதலமைச்சருக்கும் நக்கீரன் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. புதிய இளம் ஊடகத்தினரை வாழ்த்துகிறது.

-ஆசிரியர்

**மாணவர் விசாவில் 4 ஆண்டுகள் மட்டுமே அமெரிக்காவில் தங்கி படிக்க முடியும் என அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு**

## ராங்-கால்!

# கலக்கிய ஸ்டாலின்! குலுங்கிய பீகார்!

“ஹலோ தலைவரே, அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்காக, வரும் 30 ஆம் தேதி வெளி நாட்டுப்பயணத்தை மேற்கொள்ளும் முதல்வர் ஸ்டாலின், அதற்கு முன்பாக பீகார் வரை, சென்று வந்திருக்கிறார்.”

“ஆமாம்பா, ஸ்டாலின் பீகாரைக் கலக்கிவிட்டு வந்திருக்கிறாரே?”

“உண்மைதாங்க தலைவரே, பீகாரில் ராகுல்காந்தி நடத்திய வாக்காளர் உரிமைப் பேரணியின் நிறைவு நிகழ்ச்சியில், 27 ஆம் தேதி கலந்து கொண்டார் முதல்வர் ஸ்டாலின். இதற்காக, தனி விமானத்தில் அவர் பீகார் சென்றிருந்தார். அங்கே நடந்த பேரணியில் மக்கள் திரளுக்கு நடுவே, ஒரே ஜீப்பில் ராகுல், ஸ்டாலின், தேஜஸ்வி, பிரியங்கா காந்தி ஆகியோர் நின்றபடி பயணித்தனர். ஜீப்பில் முன் பக்க இருக்கையில் கனிமொழி எம்.பி., அமர்ந்திருந்தார். பேரணியின் முடிவில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய ஸ்டாலின், பா.ஜ.க.வின் துரோக அரசியலையும், தேர்தல் ஆணையத்தின் மிரட்டல் அரசியலையும் பிட்டுப் பிட்டு வைத்ததோடு, இதைக் கண்டெல்லாம் ராகுல்காந்தி பயப்படமாட்டார் என்று சூளுரைத்தார். மேலும், மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் பா.ஜ.க.வின் அத்துமீறல் அதிகாரத்தை மக்கள் நிச்சயம் பறிப்பார்கள் என்றும், பீகார் தேர்தலில் ராகுலும் தேஜஸ்வியும் கைகோத்திருப்பது மிகப்பெரிய வெற்றியை இந்தியா கூட்டணிக்கு அள்ளித் தரும் என்றும், ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தலில் பீகார், பா.ஜ.க.வின் இறுமாப்பை அடக்கிவிட்டது என்றும், எப்படிப்பட்ட சர்வாதிகாரியும் மக்கள் சக்தி முன்பு மண்டியிட்டுத்தான் ஆகவேண்டும் என்றும் அழுத்தம் திருத்தமாக அறிவித்தார். அவரது பேச்சை மிகவும் ரசித்த ராகுல், கூட்டம் முடிந்ததும் தனிப்





பீகாரில் ஸ்டாலின் -உடன் ராகுல், தேஜஸ்வி, பிரியங்கா, கனிமொழி

பட்ட முறையில் அவருக்கு நெகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்தார். பீகார் மக்கள் ரசிக்கும்படி அங்கே ஒரு கலக்கு, கலக்கிவிட்டு வந்திருக்கிறார் ஸ்டாலின்.''

''சரிப்பா, நடிகர் விஜய் மீது போலீஸ் வழக்குப் பதிவு செய்திருக்கிறதே?''

''ஆமாங்க தலைவரே, நடிகர் விஜய் மீது பெரம்பலூர் குன்னம் போலீஸ் ஸ்டேசனில் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்படுவார் என்கிறது போலீஸ் வட்டாரம். கடந்த 21ஆம் தேதி மதுரையில் அவர் நடத்திய மாநாட்டின்போது, அவர் நடந்துவந்த ரேம்ப்பின் மீது ஏறிய தொண்டர்களை, விஜய்யின் பவுன்சர்கள் கீழே தூக்கி வீசினார்கள்.''

''இதில் பெரியம்மாபாளையத்தைச் சேர்ந்த விஜய் ரசிகர் சரத்குமார், கடுமையாகப் பாதிக்கப்பட, இது குறித்து அவர் அம்மா, தனியார் தொலைக்காட்சியில் காட்டமாகப் பேட்டி கொடுத்தார். இதைப்பார்த்த விஜய் கட்சியின் செயலாளரான புஸ்ஸி ஆனந்த், வீடியோ ஒன்றை வெளியிட்டு, அதில் ராம்குமார் என்பவரைக் காட்டி, 'இவர்தான் தள்ளிவிடப்பட்ட இளைஞர், இவர் வருந்தவில்லை' என்று சீன் போட்டார்.''

''பிறகு?''

''இது பாதிப்புக்குள்ளான சரத்குமாரை எரிச்சலாக்கியது. இதைத் தொடர்ந்து அவரும் அவர் அம்மாவும் சென்று, பெரம்பலூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் விஜய் தரப்பின் மீது புகார் கொடுத்தார். அதன் பேரில் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் காவல் நிலையத்தில் நடிகர் விஜய் மற்றும் பெயர் தெரியாத அவரது பவுன்சர்கள் 10 பேர் மீது 3 பிரிவுகளில் வழக்கு,



ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் நல்லகண்ணுவை நலம் விசாரித்த டாக்டர் ரவீந்திரன் -உடன் துணைவியார் சாந்தி ரவீந்திரன்

## சிகிச்சையில் ஐயா நல்லகண்ணு!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முக்கால் நூற்றாண்டுக்கு மேலான தன் கட்சிப் பணிகளாலும் அறியப்படும் நல்லகண்ணு அவர்கள், ஆகஸ்ட் 22-ஆம் தேதியன்று தனது வீட்டில் படுக்கையிலிருந்து எதிர்பாராத விதமாக தவறி விழுந்தார். இதில் அவரது நெற்றி, கை நடுவிரல் ஆகியவற்றில் அடிபட்டுள்ளது. இதனையடுத்து உடனடியாக அவரது இரண்டாவது மகள் மருத்துவர் ஆண்டாள் மற்றும் குடும்பத்தினர் நந்தனம் அருகிலுள்ள வெங்கடேஸ்வரா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர்.

அங்கு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று சற்று தேறிவந்த நிலையில், மருத்துவமனையில் காபி அருந்தும் போது புரைக்கேறியதில், நுரையீரல் பிரச்சனை ஏற்பட்டது. உடனே அதற்கான சிகிச்சையில் சிறிது சுணக்கம் ஏற்பட, அப்போது நல்லகண்ணுவைக் காணவந்த மருத்துவத் தம்பதிகளும் இந்திய கம்யூனிஸ்ட் தோழர்களுமான மருத்துவர்கள் ரவீந்திரன், சாந்தி ரவீந்திரன் ஆகியோர், அந்த தனியார் மருத்துவமனையில் அளித்துவந்த சிகிச்சை போதாதெனவும், தீவிர சிகிச்சை தேவையெனவும் உணர்ந்து, உடனடியாக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் உதவியுடன் கொண்டு சென்றார்கள். அப்படி மாற்றாது போயிருந்தால், சிக்கல் ஏற்பட்டிருக்கும் என இந்த மருத்துவ தம்பதிகள் அபிப்ராயப்படுகின்றனர். அதன்படி ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்துக் கவனித்ததில், ஆகஸ்ட் 27-ஆம் தேதி நல்லகண்ணு அவர்களுக்கு சற்று சுயநினைவு திரும்பியது. உடல்நிலையில் சற்றே முன்னேற்றம் தென்பட்டது. இந்நிலையில் புதனன்று இரவு 11 மணி வாக்கில் நாடித்துடிப்பில் சிறிது சரிவு ஏற்பட, உடனடியாக கவனித்து தற்போது வென்டிலேஷன் துணையுடன் செயற்கை சுவாசமளித்து சிகிச்சையளித்து வருகிறார்கள்.''

**-கீரன்**



50 சதவீதம் வரி அமல்: ரூ.2,500 கோடிக்கு தங்க நகை ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கும்




மெடலை வாங்க மறுத்த
டி.ஆர்.பி.ராஜா மகன் சூர்யராஜபாலு

பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு, சம்பவம் நடந்த லிமிட்டைச் சேர்ந்த மதுரை காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இது த.வெ.க. நிர்வாகிகளையும் தொண்டர்களையும் ரொம்பவே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. இந்த விவகாரத்தில் இருந்து தப்பிப்பது எப்படி? என்கிற பதட்டப் பரபரப்பில் இருக்கிறாராம் விஜய்."

''இந்த நிலையில், வரும் சட்டமன்றத் தேர்தலில் நடிகர் விஜய் தூத்துக்குடியில் போட்டியிடப் போவதாக ஒரு டாக் உலவுகிறதே?"

"எடப்பாடி ஆட்சியின் போது தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில். 13 பேர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். அவர்களில் 8 பேர் மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த சம்பவத்திற்கு பின் தூத்துக்குடி வந்த விஜய், அந்த 13 பேர் வீடுகளுக்கும் சென்று இரங்கலைத் தெரிவித்ததோடு, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தன்னாலான நிதி உதவியையும் செய்தார். இது அந்தப் பகுதி மக்கள் மத்தியில் விஜய் மீது அபிமானத்தை ஏற்படுத்தியது."

"இதை வாக்காக அறுவடை செய்துவிடலாம் என்று விஜய் தரப்பு நினைக்கிறதாம். குறைந்த பட்சம் மீனவ மக்களின் 70 ஆயிரம் வாக்குகள் த.வெ.க. பக்கம் திரும்பும் என்றும் கணக்குப் போடப்படுகிறது. இவற்றின் அடிப்படையில் தூத்துக்குடியில் நிற்கலாமா? என்கிற ஆலோசனை விஜய் தரப்பில் நடப்பதால், அதுகுறித்த தகவல் வெளியே பரவிவருகிறது."

''புதுச்சேரி முதல்வரோடு, த.வெ.க.வின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் சந்திச்சுப் பேசினது பரபரப்பாயிருக்கே..."

"ஆமாங்க தலைவரே மதுரையில் மாநாடு முடிந்த மறுநாள் த.வெ.க.வின் பொதுச்செயலாளரான புஸ்ஸி ஆனந்த் உடனடியாக புதுச்சேரி வந்து முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் தனியே பேசியிருக்காங்க. அப்ப புதுச்சேரியில் த.வெ.க. -என்.ஆர். காங்கிரஸ் கூட்டணி அமைச்சுக்கலாம். பதிலுக்கு தமிழ்நாட்டில் என்.ஆர். காங்கிரஸ் கட்சி த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்தது என நீங்கள் அறிவிக்கணும் என விஜய்யின் ஆர்வத்தை என்.ஆரிடம் சொல்லியுள்ளார். என்.ஆர்.காங்கிரசோடு கூட்டணி வைத்தால் புதுவையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கணிசமான வாக்குகள் த.வெ.க.வுக்கு சாதகமா இருக்குங்கிறது விஜய்யோட கணக்கு. புஸ்ஸி சொன்னதையெல்லாம் கேட்டுட்டு தன் கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை செய்து பதில்சொல்வதாக சொல்லியனுப்பியிருக்கார் ரங்கசாமி என்கிறார்கள் கட்சிப் பிரமுகர்கள். தவிரவும், த.வெ.க. 234 தொகுதிகளிலும் வேட்பாளரை நிறுத்த தொகுதியளவில் பிரபலமான, வசதியான நிர்வாகிகள் இருக்கிறார்களா என பட்டியல் எடுத்துள்ளது. அதில் 30 பேருக்கு மேல் தேறவில்லை. இவர்களை தேர்தலில் நிறுத்தினால் டெபாசிட்கூட வாங்கமாட்டார்கள் என ரிப்போர்ட் வந்துள்ளது. அதனால்தான் மதுரை மாநாட்டில் பேசும் போது, அனைத்து தொகுதிகளுக்கும் நானே வேட்பாளர் என நினைத்துக்கொள்ளுங்கள் என்று பேசினார் விஜய். தமிழகத்திலும் பெரிய கூட்டணி உறுதியாகாத நிலையில், புதுச்சேரியிலாவது கூட்டணியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத்தான் இந்த வியூகமாம்.

"அனுபவமில்லாத அதிகாரிகளை முக்கிய பதவிகளில் நியமித்திருப்பதாகப் புகார்கள் எழுந்துள்ளதே?"

"கட்டுமானத் தொழில் நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான பிரச்சனைகளைக் களைய, ஒன்றிய அரசின் உத்தரவின் பேரில் ரெரா எனும் ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையத்தை தமிழக அரசு சில ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கியது. பொதுமக்கள் எந்த விதத்திலும் ஏமாந்து விடக்கூடாது

(தொடர்ச்சி 44-ம் பக்கம்)

www.nakkheeran.in



சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் 21
கிலோ கஞ்சா பறிமுதல்

# பாரில் நடிகை போதை அலப்பறை!

"நடிகை லட்சுமிமேனன், நடிகர் மிதுன் மற்றும் அடையாளம் தெரிந்த மூவர் என்னை காரில் கடத்தி அடித்து உதைத்து, கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்'' என 25-ஆம் தேதி திங்கட்கிழமையன்று அதிகாலை 3 மணியளவில் எர்ணாகுளம் டவுன் வடக்கு காவல் நிலையத்தை அணுகியிருக்கின்றார் ஆலுவாவைச் சேர்ந்த ஐ.டி. ஊழியரான அலியார்ஷா சலீம். சினிமாவில் பக்கத்து வீட்டுப்பெண்ணாக காட்சியளிக்கும் லெட்சுமிமேனன் கடத்தல்காரியா? என புருவம் உயர்த்தி அமைதிகாத்தனர் போலீஸார்.

''முந்தின நாள் இரவில் ஞாயிற்றுக் கிழமையன்று சரியாக 11.45 மணியளவில் நான் என்னுடைய நண்பர்கள் உட்பட எர்ணா குளம் பானர்ஜி சாலையில் மரைன் டிரைவ் அருகேயுள்ள வெலாசிட்டி பப்பில் மது பார்ட்டியில் இருந்தோம். அங்கு நடிகர் மிதுன், நடிகை லட்சுமிமேனன் உள்ளிட்ட 7 நண்பர்கள் பார்ட்டியில் இருந்தனர். இதில் என்னுடைய நண்பன் லட்சுமிமேனனிடம் பேசமுற்பட்டான். அதிக போதையில் இருந்ததால் அவர்கள் எங்களைச் சட்டை செய்யவில்லை.


இருப்பினும் என்னுடைய நண்பன் முயற்சி செய்துகொண்டிருந்தான். இதில் மிதுன் மற்றும் அவரது நண்பர்கள் என்னுடைய நண்பனை தள்ளிவிட்டு வாக்குவாதம் செய்த நிலையில் மேலும் ஏதேனும் பிரச்சனை கூடாது என அங்கிருந்து நாங்கள் எங்களுடைய காரில் ஏறிப் புறப்பட்டோம். எங்கிருந்துதான் வந்தார்கள் எனத் தெரியவில்லை, எங்களது



லட்சுமி மேனன்

www.nakkheeran.in





பார் வாசலில் தகராறு



கார் முன் ரகளையில் லட்சுமி மேனன்

## எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்

காரை வழிமறித்து காரின் முன்பக்க பேனட்டைத் தட்டி, காரின் கண்ணாடியில் தட்டி அராஜகம் செய்தனர். இருப்பினும், அவர்கள் என் நண்பனைக் கடத்துமளவுக்கு போவார்கள் என நினைக்க தெரியவில்லை” என்றார் கடத்தப்பட்ட அலியார்ஷா சலீமின் நண்பர். நடிகை லட்சுமிமேனன் உள்ளிட்டோர் மதுபோதையில் காரை மறித்து, காரின் முன்பக்க பேனட்டை தட்டி அராஜகம் செய்த வீடியோ மலையாளத் தொலைக் காட்சிகள் அனைத்திலும் ஒளிபரப்பாக,



மிதுன், சோனமோல். அனீஷ்

சுதாரித்துக்கொண்ட போலீஸார் விசாரணையை மளமளவென்று துவக்கினர். ‘இருதரப்பிலும் வாக்குவாதம் நடந்தது உண்மை. லட்சுமிமேனன் உள்ளிட்டோர் அதிக போதையில் இருந்ததால் அவர்கள் என்ன செய்கிறார்கள்..? என அவர்களுக்கே தெரியவில்லை. என்னுடைய நண்பன் அந்த நடிகையிடம் அறிமுகமாகிக் கொள்ளவே கையை நீட்டி ‘ஹாய்’ என்றான். இது பெரிய தவறாகி விட்டது. காது கூசும் அளவிற்கு வார்த்தைகளால் பேசுகிறார்கள். அங்குள்ள பப் நிர்வாகிகள், பவுன்சர்கள் வந்து மன்னிப்புக் கேட்டும் அவர்கள் அடங்கவில்லை. வேறு வழியில்லாமல் நாங்களும் மன்னிப்பு கேட்டோம். இருப்பினும் எங்களை விடவில்லை. மாறாக தாக்கமுற்பட்டார்கள். ஒருகட்டத்தில் பப் நிர்வாகம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் நாங்கள் வெளியேறி விட்டோம்.

அதன்பின்னரும், நாங்கள் புறப்படுகையில் காரை மறித்து கலாட்டா செய்தார்கள். எதுக்கு பிரச்சினை என காரை அங்கிருந்து எடுத்துக்கொண்டு புறப்பட்டோம்... விடவில்லை அவர்கள். எங்கள் பின்னாலேயே



வெலாசிட்டி பார்

மார்க்சிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடந்த காதல் திருமணம் - பாதுகாப்பு கேட்டு புதுமண தம்பதி மனு

தொடர்ந்து எர்ணாகுளம் வடக்கு மேம்பாலம் அருகே எங்களது காரை வழிமறித்து என்னை இழுத்துக்கொண்டு அவர்களது காரில் வலுக்கட்டாயமாக ஏற்றிச்சென்றார்கள். காருக்குள் வைத்து அடிப்பதும், உதைப்பதுமாக லட்சுமிமேனனும் மற்றவர்களும் இருந்தார்கள். ஒருகட்டத்தில் என்னை ஆலுவா-பராவூர் சந்திப்பு சாலையில் இறக்கிவிட்டுவிட்டு, வெளியில் கூறினால் கொலை செய்துவிடுவோம் என்றார்கள். அங்கிருந்து தப்பித்து காவல்நிலையம் வந்துள்ளேன்'' என்கின்றது அலியார் சலீமின் புகாரின் பேரிலான முதல் தகவலறிக்கை.

முதல் தகவலறிக்கை அடிப்படையில் மிதுன், அனீஷ், சோனமோல் ஆகிய மூன்று நபர்களைக் கைதுசெய்து பாரதீய நியாய சன்ஹிதா 2023இன் பிரிவுகள் 140(2) (கொலை செய்வதற்காக கடத்தல் அல்லது கடத்தல்), 126 (தவறான கட்டுப்பாடு), 296 (ஆபாசமான செயல்கள்), 127 (2) (தவறாக அடைத்து வைத்தல்), 115 (2) (தானாக முன்வந்து காயப்படுத்துதல்), மற்றும் 351 (குற்றவியல் மிரட்டல்) ஆகியவற்றின் கீழ் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் முதன்மைக் குற்றவாளியான லட்சுமிமேனன் தலைமறைவாக, காவல்துறையும் தேடுதல் வேட்டையை முடுக்கியது.

இந்நிலையில் அலியார்ஷா சலீம், அவரது குழுவினர்தான் தன்னை அவமதித்தனர் என முன்ஜாமீன் கோரி லட்சுமிமேனன் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். முன்ஜாமீன் மனுவை பரிசீலித்த நீதிபதி பெச்சு குரியன் தாமஸ், நடிகை லட்சுமிமேனனை செப்டம்பர் 17 வரை கைதுசெய்ய தடை விதித்தார். இது இப்படியிருக்க, புகார்தாரரும் அவரது நண்பர்களும் தங்கள் குழுவிலுள்ள பெண்களிடம் தவறாக நடந்துகொண்டதாகவும், பீர் பாட்டில்களை அவர்கள் மீது வீசியதாகவும், அவர்களை உடல்ரீதியாகத் தாக்கியதாகவும் புதிய புகாரை எர்ணாகுளம் போலீஸாரிடம் முன்வைக்க, அதன் பெயரில் புதிதாக வழக்கு பதிவுசெய்யப் பட்டது.

''பக்கத்து வீட்டுப்பெண் தோற்றம் கொண்டவர் லட்சுமிமேனன். அவர் வில்லத்தனமாக நடந்துகொண்டதை சேனல்கள் தோலுரித்துக் காட்டின. மார்க்கெட் இழந்த நடிகைகளே பெரும்பாலும் பணத்திற்காக ஆண் நண்பர்களுடன் பப்பிற்கு வருவார்கள். இந்த வழக்கில் லட்சுமிமேனன் முதன்மைக் குற்றவாளி அல்ல. அவரை அழைத்து வந்த 'அரசியல்வாதி' யார்..? துப்பாக்கியுடன் வந்தார்களா.? என விசாரணையை துவக்கியுள்ளது மத்திய விசாரணை அமைப்பு. இதில் இன்னும் பல மர்ம முடிச்சுக்கள் அவிழும்'' என்கின்றனர் அங்குள்ள போலீஸார்.

**-நாகேந்திரன்**

## இறுதிச் சுற்று!

அமெரிக்கா விதித்த 50 சதவீத வரி இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், தமிழகத்தில் திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தக பாதிப்பு ஏற்படும் என்று ஏற்றுமதி யாளர்கள் சங்கத்தினர் கவலையடைந்துள்ளனர். இந்த தகவல் முதல்வர் ஸ்டாலினின் கவனத்துக் குக் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக வியாழக்கிழமை (28-08-2025) தனது சமூக வலைத் தளத்தில் பதிவு செய்த முதல்வர் ஸ்டாலின், ''அமெரிக்க வரியால் தமிழகத்தில் ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. திருப்பூரில் 3 ஆயிரம் கோடி ரூபாய் ஜவுளி வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக தொழில்துறை மற்றும் தொழிலாளர்களை பாதுகாக்க, ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழி லாளர்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் சலுகைகளை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார். **-இளையர்**

சத்தீஸ்கரில் பெய்த கனமழையில் வெள்ளத்தில் சிக்கிய ராணிப்பேட்டை தமிழர் குடும்பத்துடன் பலி

# தலைமுறைகள் தாண்டி தலைசிறந்த சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300

7 தலைமுறைகள், 213 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**



Dr.சிவராஜ் சிவகுமார்

**சென்னை கிளை**
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

**ஈரோடு கிளை**
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

**ஒசூர் கிளை**
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

**திருப்பத்தூர் கிளை**
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

| | | | | |
|---|---|---|---|---|
| **திருச்சி**<br>1ம், 9ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் அபிராமி<br>சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில். | **திருப்பூர்**<br>1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை<br>14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை<br>SAP ரெஸிடென்ஸி<br>111, முனிசிபல் ஆபீஸ் ரோடு. | **தஞ்சை**<br>2ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>ஹோட்டல் காசி இன்<br>1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம். | **கும்பகோணம்**<br>2ம் தேதி<br>மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் திருமால்<br>ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில். | **நாகர்கோவில்**<br>2ம் தேதி,<br>காலை 6 முதல் மாலை 5 வரை,<br>ஹோட்டல் கங்கா பேலஸ்<br>K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன். |
| **நெல்லை**<br>3ம், 23ம் தேதியும்,<br>காலை 6 முதல் மாலை 5 வரை,<br>பரணி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு. | **விழுப்புரம்**<br>3ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஆதித்யா<br>தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர். | **காஞ்சிபுரம்**<br>4ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>வசந்த் வில்லா<br>T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில். | **மதுரை**<br>4ம், 22ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>காலேஜ் ஹவுஸ்<br>டவுன் ஹால் ரோடு. | **கள்ளக்குறிச்சி**<br>4ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>AKT லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில். |
| **தேனி**<br>7ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்<br>பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு. | **திண்டுக்கல்**<br>8ம், 24ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஐஸ்வர்யா<br>ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில். | **திருவண்ணாமலை**<br>9ம், 22ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி. | **வேலூர்**<br>11ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்<br>3, தென்னைமரம் தெரு. | |
| **கடலூர்**<br>11ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>ஹோட்டல் CAR லாட்ஜ்<br>62, லாரன்ஸ் ரோடு. | **சிதம்பரம்**<br>11ம் தேதி<br>மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஜெயராம்<br>35, 36, SP கோயில் தெரு. | **மாயவரம்**<br>12ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>அல்-முஜம்மில் லாட்ஜ்<br>பழைய பஸ்நிலையம் அருகில். | **நாகப்பட்டினம்**<br>12ம் தேதி<br>மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>நியூ குமார் லாட்ஜ்<br>புதிய பஸ் நிலையம் அருகில். | **மன்னார்குடி**<br>13ம் தேதி<br>காலை 6 முதல் மதியம் 12 வரை<br>ஹோட்டல் காவேரி லாட்ஜ்<br>புதிய பஸ் நிலையம் அருகில். |
| **புதுக்கோட்டை**<br>13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை<br>26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ராயல் பார்க்<br>புதிய பஸ்நிலையம் எதிரில். | **கோவை**<br>13ம், 26ம் தேதியும்<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>OYO ROOMS (கோடா ஓட்டல்)<br>294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில். | **கரூர்**<br>14ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஆர்த்தி ஹோட்டல்<br>தின்னப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில். | **புதுவை**<br>16ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி<br>பஸ் நிலையம் எதிரில். | |
| **தென்காசி**<br>18ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்<br>2, பழைய பஸ் நிலையம் ரோடு. | **கிருஷ்ணகிரி**<br>20ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்<br>239, பெங்களூர் ரோடு. | **ஆரணி**<br>21ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில். | **ராம்நாடு**<br>24ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5வரை<br>ஹராஜா பேலஸ்<br>துரைராஜ் சத்திரம் வீதி. | |
| **சிவகாசி**<br>25ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>மணீஸ் லாட்ஜ்<br>பஸ் நிலையம் பின்புறம். | **பொள்ளாச்சி**<br>27ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>சக்தி ஹோட்டல்<br>144, கோவை ரோடு. | **மேட்டுப்பாளையம்**<br>28ம் தேதி<br>காலை 6 முதல் மாலை 5 வரை<br>ஹோட்டல் காவேரி<br>K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு. | | |

சிவராஜ் சித்த மருந்துகளை ஆன்லைன் மூலம் பெற www.sivarajsiddha.com | G Pay Paytm 98427 22500



7 தலைமுறைகள், 213 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

for more details

Advt





ஆம்புலன்ஸ் ஓட்டுநர் செந்தில் மீது தாக்குதல்



எடப்பாடி பிரச்சாரம்



# ஆம்புலன்ஸ் மீது அ.தி.மு.க.வினர் தாக்குதல்! தொடரும் அராஜகம்!

**தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. சார்பில் அதன் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி 'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' எனும் பேரில் பிரச்சாரப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன் ஒருபகுதியாக திருச்சி துறையூர் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரச்சாரத்தில் ஈடுபடவிருந்தார். அவரை வரவேற்பதற்காக கூட்டத்தைக் காட்டவேண்டும் என்ற முனைப்புடன் அ.தி.மு.க. நிர்வாகி கள் முன்னதாகவே சாலையின் இருபக்கமும் பொதுமக்களை திரட்டி நீண்டநேரம் காத்திருக்கச் செய்திருந்தனர்.**

அச்சமயத்தில் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் மயங்கிவிட்டதாகக் கூறி அவரை மருத்துவமனையில் சேர்ப்பதற்காக 108 ஆம்புலன்ஸை அழைத்திருக்கிறார்கள். அப்படி அப் பகுதிக்கு வந்த ஆம்புலன்ஸ், அ.தி.மு.க.வினர் குழுமியிருந்த இடத்துக்கு வந்தபோது, அ.தி.மு.க.வினர், ஏற்கெனவே எடப்பாடி பேசியிருந்த பேச்சை மனதில்கொண்டு, அந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மீது தங்கள் பலத்தை காட்ட முற்பட்ட னர். உடனடியாக அந்த ஆம்புலன்ஸை குறுக்கே புகுந்து மறித்து, தங்களைத் தாண்டிச் செல்லவிடாமல் தடுத்தனர். பின்னர் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் செந்திலை வசைபாடியபடி அ.தி.மு.க.வினர் வாக்குவாதத்தில் ஈடுபட, தான் வந்த காரணத்தை ஓட்டுநர், அவர்களிடம் விளக்கியிருக்கிறார். இந்த ஆம்புலன்ஸூம் நோயாளியில்லாமல் இருப்பதால் ஆத்திரம் தலைக்கேறிய அ.தி.மு.க.வினர், ஆம்புலன்ஸ் ஓட்டுநர் சொன்னதையெல்லாம் காதில் வாங்கிக்கொள்ளாமல்,

www.nakkheeran.in



ஆம்புலன்ஸை சுற்றி வளைத்து தாக்கும் அ.தி.மு.க.வினர்



ஓட்டுநரோடு வம்பு பண்ணி அவர் அணிந்திருந்த வெள்ளைநிற மேல்கோட்டை பிடித்து வலுவாக இழுத்ததில் அவருடைய தோள்பட்டை இறங்கி கையை தூக்குவதற்கு இயலாதபடியானது. அ.தி.மு.க. வினரில் இன்னொரு தரப்பு ஆம்புலன்ஸின் பின்புறக் கதவை திறந்து வன்முறையில் ஈடுபட்டதில் ஆம்புலன்ஸின் உள்ளிருந்த டெக்னீஷியன் ஹேமலதாவுக்கும் காயம் ஏற்பட்டது. அ.தி.மு.க.வினரின் தாக்குதலால் காயமடைந்த துறையூரை சேர்ந்த ஓட்டுநர் செந்தில், கலிங்குடையான்பட்டியை சேர்ந்த டெக்னீஷியன் ஹேமலதா ஆகியோர் துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் ஹேமலதா, திருமணமாகி 8 மாத கர்ப்பமாக உள்ளார்.

இந்த நிலையில், ஆம்புலன்ஸ் ஓட்டுநர் கொடுத்த புகாரின் பேரில் அ.தி.மு.க. பிரமுகர்கள் 14 பேர் மீது, பொதுச்சொத்தை சேதப்படுத்தியது, 108 அவசர ஊர்தியான ஆம்புலன்ஸ் ஓட்டுனர் மற்றும் மருத்துவ உதவியாளர் கர்ப்பிணியான பெண்மணியை தாக்கியது உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி துறையூர் அ.தி.மு.க. நகரச் செயலாளர் அமைதி பாலு, துறையூர் நகர்மன்ற உறுப்பினர் தீனதயாளன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பொன் காமராஜ், வினோத் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள் 10 பேர் மீது துறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணையை துரிதப்படுத்தியுள்ளனர்.

பரபரப்பை ஏற்படுத்தியுள்ள ஆம்புலன்ஸ் மீதான தாக்குதலுக்கு காரணகர்த்தா எடப்பாடி பழனிச்சாமியே ஆவார். அவர் அணைக்கட்டு பகுதியில் பிரச்சாரம் செய்தபோது அவ்வழியே வந்த ஆம்புலன்ஸ் குறித்து, "நான் தொடர்ந்து பல கூட்டங்களில் கவனித்துவருகிறேன். கூட்டத்துக்கு நடுவில் வேண்டுமென்றே ஆள் இல்லாத ஆம்புலன்ஸை அனுப்பி இடையூறு செய்து வருகிறார்கள். இப்படியொரு கேவலமான செயலை இந்த அரசாங்கம் செய்து வருகிறது. எத்தனை ஆம்புலன்ஸ் விட்டாலும் எதுவும் செய்ய முடியாது. ஆம்புலன்ஸ் நம்பரை நோட் பண்ணு, ஆம்புலன்ஸ் டிரைவர் யாருன்னு நோட் பண்ணுங்க... இனி பேஷண்ட் இல்லாத ஆம்புலன்ஸ் எங்கள் கூட்டத்துக்குள் வந்தால் அந்த ஆம்புலன்ஸின் டிரைவரைத்தான் பேஷண்டாக அனுப்பிவைப்போம்" என்று 108 ஆம்புலன்ஸ் வாகன ஓட்டுநர்கள் மீது வன்முறையை ஏவும்படி பேசியதால்தான், தற்போது ஓட்டுநர் மற்றும் டெக்னீஷியன் மீது இப்படியான மோசமான தாக்குதல் நடந்துள்ளது. இது அபாயகரமான அரசியலாகப் பார்க்கப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து பொதுமக்கள் கூறுகையில், "ஆம்புலன்ஸ் ஓட்டுநரை தடுத்து நிறுத்தி அவரது அடையாள அட்டையைப் பறித்து அ.தி.மு.க.வினர் தாக்கியுள்ளனர். அ.தி.மு.க.வினரால் தாக்கப்பட்ட ஆம்புலன்ஸ் உதவியாளர் ஒரு கர்ப்பிணிப் பெண் என்றும் பாராமல் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதேபோல் அ.தி.மு.க. பிரச்சாரம் தொடங்கும்முன் வந்த ஆம்புலன்ஸ் வாகனத்தை தடுத்து நிறுத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர். எடப்பாடி பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றவருக்கு மயக்கம் ஏற்பட்டதால்தான் ஆம்புலன்ஸ் அங்கு சென்றது. விஸ்வா என்பவர் மயங்கி விழுந்ததன் காரணமாகவே ஆம்புலன்ஸை அழைத்ததாக அங்கிருந்த பெண் ஒருவர் கூறியுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் ஓட்டுநரை நேரில் சந்தித்தபோது, "நான் பேசுவதை அவர்கள் யாரும் காதில் கேட்காமல், என்னுடைய சட்டையைப் பிடித்து இழுத்ததில் என்னுடைய தோள்பட்டை கீழே இறங்கி வலி அதிகமாகி விட்டது. பின்னர் காவல்துறையினர் வந்து எங்களை மீட்டு அங்கிருந்து அனுப்பி வைத்த பின்னர், மயங்கி விழுந்த நபரை மீட்டு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம்" என்று கூறினார். எந்த எடப்பாடி ஆம்புலன்ஸுக்கு எதிராகப் பேசினாரோ, அவரது பிரச்சாரக் கூட்டத்தில் மயங்கியவரை காப்பாற்ற வந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மீதே தாக்குதல் நடத்திய கொடுமையை என்னவென்பது?!

**-துரை.மகேஷ்**

எதையும் இழப்பது சுலபம்;
தக்கவைப்பதே கடினம்!

அ.ராஜாரகுமான், கம்பம்

**தனிப்பெரும்பான்மையுடன் அ.தி.மு.க. ஆட்சியமைக்கும் என்பதில் எடப்பாடி பழனிசாமி அவ்வளவு உறுதியாக உள்ளாரே?**

பீகாரில் ஒருங்கிணைந்த ஜனதா தளமும், பா.ஜ.க.வும் நீண்ட காலம் கூட்டணியில் இருக்கின்றன. 2015 தேர்தலில் 115 தொகுதிகளை வென்ற ராஷ்ட்ரிய ஜனதா தளம், 2020 தேர்தலில் வெறும் 43 இடங்களை மட்டுமே வென்றது. மாறாக, பா.ஜ.க. 74 இடங்களை வென்றது. வரும் தேர்தலில் ஒருங்கிணைந்த ஜனதா தளம் பின்னடைவைச்



'உண்மை' -சுளீரென ஒரு அடி கொடுத்து விட்டுவிடும்; 'பொய்' -டைம் கிடைக்கும்போதெல்லாம் வச்சு செய்யும்.

# மாவலி பதில்கள்

சந்தித்தால் பா.ஜ.க. ஆட்சியில் அமரும், துணை முதல்வர்போல பா.ஜ.க தரும் ஏதோ பதவியை வாங்கிவிட்டு ஜனதா தளம் கைகட்டி நிற்கவேண்டியதுதான். மகாராஷ்டிராவில், பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்த சிவசேனா கட்சியே இரண்டாகிவிட்டது. தெலுங்கானாவில் பா.ஜ.க.வுடன் கூட்டணிகூட வைக்கவில்லை. ஆனால் தெலுங்கானா ராஷ்டிர சமிதியை, பா.ஜ.க.வுடன் இணைக்க நெருக்கடி வருவதாக சந்திரசேகர ராவின் மகள் குற்றம்சாட்டுகிறார். எடப்பாடி பழனிசாமி மட்டும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து முதல்வராகக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறார். 'லட்டுல வெச்சேன்னு நினைச்சியா... நட்டுல வெச்சேன்'னு ஒரு டயலாக்கை எடப்பாடி சீக்கிரமே கேட்பார்.

எஸ். அர்ஷத் ஃபயாஸ், குடியாத்தம்

**காதல் திருமணம் செய்வோர் கமலாலயம் வரலாம் என அழைப்பு விடுத்துள்ளாரே பா.ஜ. மு. மா.த.?**

பிடித்துவைத்து, ஆணவக் கொலை செய்வோரின் கைகளில் ஒப்படைத்து சேவை செய்வோம் எனச் சொல்கிறார்போல.

க.அருச்சுனன், செங்கல்பட்டு

**தெரு நாய்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்தாலே எண்ணிக்கை ஒரு ஆண்டில் மிகக் குறைந்துவிடும், ஏன் அரசு கண்டுகொள்வதில்லை?**

அது சரிதான். ஆனால் தமிழ்நாட்டை மட்டும் எடுத்துக்கொண்டால் எத்தனை லட்சம் தெருநாய்கள் இருக்கிறதோ. இவையனைத்தையும் பிடித்து கருத்தடை செய்ய எத்தனை ஆயிரம் பணியாளர்கள் தேவைப்படுவார்கள், எத்தனை கோடி பணம் தேவைப்படும்... அங்கேயிருக்கிறது சிக்கல்!

க.இசக்கிராஜா, கோவில்பட்டி

**சுதந்திரம் தேவையெனில் திருமணமே செய்திருக்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் சொல்வது சரிதானா...?**

ஆணோ, பெண்ணோ திருமணம் செய்துகொள்வது என்பது பொறுப்பேற்றுக் கொள்வதாகும். பதின்பருவத்தில் பெற்றோரிடம் பாக்கெட் மணி வாங்கிச் செலவழித்து இருந்ததுபோல இருக்கமுடியாது. நீங்களே ஒரு குடும்பத்தின் தலைவராக ஆகிறீர்கள். புதிய பொறுப்புகள் வருகின்றன. அப்போதும் சுதந்திரம் என்ற பெயரில் விட்டேத்தியாய் இருந்துவிட்டு திருமணத்தில் சுதந்திரமில்லை என்று நீதிமன்றத்துக்கு வரக்கூடாது. அனைத்தையும் யோசித்து திருமணம் மேற்கொள்ளவேண்டும் என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கலாம்.

வாசுதேவன், பெங்களூரு

**ஆறு மொழிகள் அறிந்த கமல், கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றவேண்டியது கட்டாயம் என்று கூறியுள்ளாரே..?**

ஆறு மொழிகள் தெரியாவிட்டாலும் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றச் சொல்வதில் தவறில்லை. ஒன்றிய அரசு நீக்கும், சேர்க்கும் பாடத்திட்டங்களைப் பார்த்தால் கல்வி மாநில அரசின்வசம் இருப்பதுதான் சிறப்பானதெனப்படுகிறது.

மாயூரம் இளங்கோ, மயிலாடுதுறை.

**அமெரிக்காவிற்கான குறிப்பிட்ட சில அஞ்சல் சேவைகளை இந்திய அரசு நிறுத்தியுள்ளதே..?**

இந்தியாவின் மீதான 50% வரிவிதிப்புக்கு எதிராக அமெரிக்காவுக்கு வழங்கும் அஞ்சல் சேவையை தற்காலிகமாக நிறுத்திவைப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து சர்வதேச அஞ்சல்களுக்கும் சுங்கக் கட்டணம் வசூலிக்க முடிவு செய்துள்ளது அமெரிக்கா. அமெரிக்காவில் குடியேறிய இந்தியர்களுக்குத்தான், இந்தியாவிலிருந்து அஞ்சல் சேவை தேவை. பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு அது தேவைப்படாது. ஆக, அமெரிக்காவின் வரிவிதிப்புக்காக, இந்தியர்களையே தண்டிக்கலாமா? தவிரவும், சமீபத்தில் பதிவுத் தபால் சேவையை இந்திய அஞ்சல் துறை நிறுத்திவிட்டு, விரைவு அஞ்சல் மட்டுமே நடைமுறையிலிருக்கும் என அறிவித்தது. பதிவு அஞ்சலை எந்த வரிவிதிப்பு காரணமாக இந்தியா நிறுத்தியது?

ஆர். கார்த்திக், கானாத்தூர்

**'கூலி' படத்தில் பூஜா ஹெக்டேவுக்கு 2 கோடி சம்பளமாமே?**

இருக்கட்டுமே. நானும் நீங்களும் பத்து லட்சத்துக்கு ஆட வருகிறோம் எனச் சொன்னாலும், நம்மை புக் செய்யவா போகிறார்கள்? •




இதழியல் நிறுவனத்தை தொடங்கி வைக்கும் முதல்வர் ஸ்டாலின் -உடன் ஆசிரியர் வீரமணி, துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் சாமிநாதன், மா.சு.

# இதழியல் துறையில் ஒரு புரட்
# பெருமிதத்தில் முதல்வர் ஸ்டா

**இதழியல் துறையில் உண்மையும் அறமும் ஒருசேர பயணித்து சர்வதேச அளவிலான பத்திரிகையாளர்களை உருவாக்கும் நோக்கத்தில் தமிழகத்தில் முதன்முறையாக இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கியிருக்கிறது தி.மு.க. அரசு. இந்த நிறுவனத்தை 25-ந் தேதி தொடங்கிவைத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.**

இந்த நிகழ்வில் துணைமுதல்வர் உதயநிதி, செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தி.க.தலைவர் கி.வீரமணி, இதழியல் நிறுவனத்தின் தலைவர் ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ். பன்னீர்செல்வன், தமிழக அரசின் மாநிலத் திட்ட குழுத் துணைத்தலைவர் ஜெயரஞ்சன், மூத்த பத்திரிகையாளர்கள் நக்கீரன்கோபால், குணசேகரன், திருமாவேலன், கார்த்திகைச்செல்வன், செய்தித் துறையின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஓராண்டு இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பு (PG Diploma in Journalism) 2025-2026 கல்வியாண்டான இந்த வருடம் முதல் தொடங்கியுள்ளது. இதழியல் கல்வியை உலகத் தரத்திற்கு உயர்த்துவதும், தமிழக மாணவர்களை மிகச் சிறந்த இதழாளர்களாகவும், கல்வியாளர்களாகவும் உருவாக்குவதே இதன் நோக்கமாகும். படைப்பாற்றலையும், பல்துறை திறன்களை வளர்த்துக் கொள்ளவும் செயல்திறன் கூடிய நவீன கல்வி முறையை இந்நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது.

இந்திய அளவில் இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேசன் எனும் அரசு நிறுவனத்தை இதழியலுக்காக ஒன்றிய அரசின் தகவல் தொடர்புத்துறை நடத்தி வருகிறது. ஆனால், எந்த ஒரு மாநில அரசும் இப்படி ஒரு கல்வி நிறுவனத்தை நடத்தவில்லை. அந்த வகையில், தமிழக பட்டதாரிகளுக்காக இந்த நிறுவனத்தை தி.மு.க. அரசு தொடங்கியிருப்பது தேசிய அளவில் உற்றுநோக்கப்படுகிறது.

இதழியல் துறைக்காக சிறப்பான ஒரு கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டிருப்பது குறித்து செய்தித்துறை அமைச்சர் சாமிநாதனை சந்தித்துப் பேசியபோது, "சுதந்திரத்தின் பயன்பாட்டை புரிந்துகொள்ள இதழியல் துறை பெரும் பங்காற்றுகிறது. தரவுகளின் அடிப்படையில் கொடுக்கப்படும் நம்பிக்கைக்குரிய செய்திகளே உரிமைக்கான முதல்படி. அதனை இலக்காகக் கொண்டு உண்மையும் அறமும் நேர்மையும் இதழியல் துறையில் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த நிறுவனத்தை தொடங்கியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

இதழியல் துறையில் முழுமையான

www.nakkheeran.in



பத்திரிகையாளர்களுடன் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் சாமிநாதன், மா.சு. உடன் ஆசிரியர் வீரமணி

சி !

லின் !



நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் சாமிநாதன், உடன் நக்கீரன் ஆசிரியர்

பயிற்சிபெற்று திறமையான பத்திரிகையாளர்களாக, ஊடகவியலாளர்களாக, கல்வியாளர்களாகத் தமிழக மாணவர்கள் உருவாவதற்கு இந்த நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். இதழியல் துறை என்பது மெத்தப் படித்தவர்களுக்கும், வசதி படைத்தவர்களுக்குமே உரியது என்கிற மாயையில், அதெல்லாம் எட்டாக்கனி என நினைத்துக்கொண்டிருக்கும் ஏழை மாணவர்களுக்கு, இதழியல் துறை உங்களுக்கு எட்டும் கனிதான் என்கிற நம்பிக்கையை விதைப்பதற்கான முயற்சிதான் இந்த நிறுவனம். மிக மிகக் குறைவான கட்டணத்தில் சர்வதேச அளவிலான பாடத் திட்டங்கள் இங்கு பயிற்றுவிக்கப்படவிருக்கிறது.

இந்தத் துறையில் சேர்வதற்கு நடப்பாண்டில் 90 மாணவ-மாணவிகள் விண்ணப்பித்தனர். அவர்களில் தகுதியின் அடிப்படையிலும் இடஒதுக்கீட்டின் அளவுகோலிலும் 60 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது ஒரு வருட முதுநிலை பட்டயப் படிப்பு. இந்த படிப்பு இரண்டு செமஸ்டர்களை உள்ளடக்கியது. பயிலும் மாணவ மாணவிகளுக்குத் தேவையான அனைத்து



இதழியல்துறை தலைவர் ரவி

வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன" என்கிறார் பெருமிதமாக.

இதழியல் கல்வி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வனை சந்தித்துப் பேசியபோது, "தமிழக அரசின் மாநிலத் திட்டக்குழு, கடந்த 2022-23 நிதியாண்டில் அரசுத் துறைகளில் நமக்கான இடைவெளி எங்கெல்லாம் இருக்கிறது என ஒரு ஆய்வை மேற்கொண்டபோது, தமிழகத்தில் இதழியல் துறையில் மாறுபட்ட சூழல் இருப்பதை கண்டறிந்தது. குறிப்பாக, பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இதழியல் பட்டப்படிப்பு இருந்தாலும், ஒன்றிய அரசு மற்றும் யூ.ஜி.சி.யின் தலையீடுகள் இருக்கவே செய்கின்றன. இதழியல் துறையில் சுதந்திரமும், நேர்மையும் அவசியம். அதனால், தமிழக மாணவர்களுக்காக நாமே ஒரு கல்வி நிறுவனத்தை தொடங்கலாம் என்கிற கொள்கை முடிவின்படி உருவானதுதான் இந்த நிறுவனம்.

இன்றைய ஊடகம், அச்சு, ஒலி-ஒளிபரப்பு,



நேரில் மோதி வெல்ல முடியாதவன் அவதூறுகளைப் பரப்புகிறான்!



பத்திரிகையாளர்களிடம்
முதல்வர் பேச்சு

இணையம் என பல்வேறு தளங்களில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனையொட்டி, வளர்ந்து வரும் சமூக ஊடகப் பார்வையையும் இணைத்து தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் திறமையான இதழாளர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுத்திக்கொள்கிறது இதழியல் கல்வி நிறுவனம். தமிழும் ஆங்கிலமும் தெரிந்த சர்வதேச நிபுணர்களைக் கொண்டு கல்வி கற்றுத்தரப்படுகிறது. அதற்கேற்ப பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறந்த இதழாளர்கள், நிபுணர்கள், அறிஞர்கள், செயற்கை நுண்ணறிவு, அறிவியல், சமூக அறிவியல், சட்டம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளிலிருந்து வல்லுநர்களையும் அழைத்து சிறப்பு வகுப்புகள் எடுக்கப்படவுள்ளன.



ஏ.எஸ்.பன்னீர்செல்வம்

இந்த நிறுவனம், நிறுவன சட்டவிதிகளின்படி பதிவு செய்யப்பட்டிருப்பதால், தனித்த அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பாகும். அரசு தலையீடோ, அரசியல் தலையீடோ துளியளவு கூட இருக்காது. நிறுவனத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மட்டுமே அரசின் செயல்பாடாக இருக்கும். மேலும், அரசின் இடஒதுக்கீடு முறையை முழுமையாக கடைப்பிடிக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், தமிழகத்திலுள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டின் அளவை விட அதிகமாகவே இந்த முறை மாணவ -மாணவிகளை சேர்த்திருக்கிறோம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், 1 இடம் கொடுக்கப்பட வேண்டிய பழங்குடியினருக்கு 2 இடங்கள் தரப்பட்டுள்ளது. அதேபோல, 9 இடங்கள் தரப்பட வேண்டிய பட்டியலினத்தவர்க்கு 15 இடங்களும், 16 இடங்கள் தரப்பட வேண்டிய பிற்படுத்தப்பட்டோருக்கு 31 இடங்களும், 12 இடங்கள் தரப்பட வேண்டிய மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 14 இடங்களும் அதிகரித்துத் தந்திருக்கிறோம். அதேபோல, பொதுப்பட்டியலில் போட்டியிடும் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு அவர்களுக்கான இட ஒதுக்கீட்டு சலுகைகள் எந்த வடிவத்திலும் மறுக்கப்படவில்லை.

கல்விக்கட்டணம் என்கிற முக்கியமான ஒரு விசயம் இருக்கிறது. அதாவது இதழியல் கல்வி நடத்தும் ஒன்றிய அரசின் நிறுவனத்தில் பி.ஜி.டிப்ளமோ படிப்பை படிக்க வருடத்துக்கு 1,15,000 ரூபாயை கல்விக்கட்டணமாக வசூலிக்கிறது ஒன்றிய அரசு.

தனியார் கல்வி நிறுவனங்கள் குறைந்தபட்சம் 3 லட்சத்திலிருந்து 5 லட்சம் ரூபாய் வசூலிக்கின்றன. ஆனால், இதே பி.ஜி.டிப்ளமோ படிப்பை தமிழக அரசின் இதழியல் கல்வி நிறுவனம் ஆண்டுக்கு 10,000 ரூபாய் மட்டுமே கல்விக்கட்டணமாக நிர்ணயித்திருக்கிறது.

இதழியல் துறையில் இந்திய மொழிகளுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் தமிழ்மொழிக்கு இல்லை. ஆங்கில இதழியலுக்கும் தமிழ் இதழியலுக்குமான இடைவெளி அதிகம். அதனை குறைத்து, வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வது இந்த நிறுவனத்தின் தலையாய பணி. நிச்சயம் இதழியல் துறையில் ஒரு புரட்சியும் மறுமலர்ச்சியும் இந்த நிறுவனம் ஏற்படுத்தும்" என்கிறார் உணர்வுப்பூர்வமாக!



அமைச்சர்
சாமிநாதன்

**-இரா.இளையசெல்வன்**

www.nakkheeran.in



பிரசன்ன ஜோதிடர்
ஐ. ஆனந்தி
துல்லியமான கணிப்பில்
புரட்டாசி மாத
ராசி பலன்கள்
பரிகாரங்களுடன் கூடிய
தனிப்புத்தகம் இலவசம்!
4 வயதில்
ஞானசம்பந்தன்
ஆனேன்!
பட்டிமன்ற நடுவரின்
பக்தி அனுபவங்கள்!
இப்போது விற்பனையில்...
ஓம்
சரவணபவ
ஆன்மிக மாத இதழ்
செப்டம்பர் 2025 ரூ.40
Advt

**ஆற்றல் அனைவரிடமும் உண்டு...**
**தூண்டுதல் மட்டுமே தேவை!**

# சட்டவிரோத சல்

## –பட்டாசு விபத்துகளின் நிஜப் பின்னணி!

பட்டாசு ஆலை விபத்துகளில் பலியானவர்கள் குடும்பத்திற்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.4 லட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் நிவாரணமாக அக்குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் வழங்க வேண்டும் என ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பட்டாசு ஆலை நிர்வாகத் தரப்பிலிருந்தும் ரூ.5 லட்சம் தரப்படுகிறது. விதிமீறலான பட்டாசு விபத்துகள் தொடர்ந்து நடப்பதும், உயிர்ப் பலிகளுக்கான நிவாரணத் தொகை அதிகரித்துக்கொண்டே போவதும், பட்டாசு ஆலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பினை கேள்விக்குறி ஆக்கியுள்ளது. இதற்கெல்லாம் தீர்வுகாண முடியாத நிலையில், விதிமீறலான சில சம்பவங்கள் விருதுநகர் மாவட்டத்தில் தொடர்ந்து நடக்கின்றன.

கடந்த 21-ஆம் தேதி பட்டாசு, தீப்பெட்டி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப் பொருளான சல்பர் 16 டன், தடையின்மைச் சான்று இல்லாமல் விதிமீறலாக கேரளாவிலிருந்து லாரி மூலம் கொண்டுவந்தபோது பிடிபட்டது. விருதுநகர் -சூலக்கரை காவல்நிலையம் வழக்கு பதிவுசெய்து, கொள்முதல் செய்த சந்திரா கெமிக்கல் உரிமையாளர் சந்திரனையும், டிரைவர் கருப்பசாமியையும் கைது செய்து, 16 டன் சல்பரையும் பறிமுதல் செய்தனர். இதே போல், கடந்த ஜூன் 28-ஆம் தேதி, சிவகாசி, ஸ்ரீராம் கெமிக்கல்ஸுக்காக கேரளாவிலிருந்து லாரி மூலம் கொண்டுவரப் பட்ட 400 கிலோ சல்பரை சிவகாசி கிழக்கு காவல்நிலையம் பறிமுதல் செய்தது.



ஓவி ரெட்டி

நாம் களமிறங்கினோம். பட்டாசு உற்பத்தியாளர்கள் தரப்பில் தகவல்களைக் கொட்டினார்கள். கையெறி குண்டு போன்றவற்றைத் தயாரிக்கக்கூடிய சமூக விரோதச் செயல்களுக்கும் பயன்படும் கந்தகம் (SULFUR) விதிமீறலாக கேரளாவிலிருந்து சப்ளை செய்யப்படும் அபாயகரமான பின்னணியை விவரித்தனர்.

முதலில் சல்பர் குறித்து நாம் தெரிந்து கொள்ளவேண்டும். பயமுறுத்தும் எரிபொருளான சல்பரில் இருந்துதான் சில படிகளைக் கடந்து சல்பூரிக் அமிலம் தயாரிக்கப்படுகிறது. ஜெயிலர் திரைப்படத்தில்கூட வில்லன் கேரக்டர், தனக்குத் துரோகம் செய்பவர்களை கந்தக அமிலத்தில் (Sulfuric Acid) மூழ்கடித்து ஊறவைத்து உருத்தெரியாமல் கொடூரமாகக் கொலை செய்வதுபோல் காட்டியிருப்பார்கள். வெடிக்கும் தன்மை காரணமாக சல்பருக்கு கடுமையான பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவை. சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் ஒரு அபாயகரமான பொருளாகவே சல்பர் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சல்பர் உரிமம், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து விதிகளின் கீழ் வழங்கப்படுகிறது.

பட்டாசு உற்பத்தியின் மூலப்பொருள்களில் முக்கியமான ஒன்றாக சல்பர் உள்ளது. சல்பர் உரிமம் பெற்ற பட்டாசு ஆலைகள், சல்பர் விநியோகம் செய்யும் கெமிக்கல் நிறுவனங்களிடமிருந்து சல்பர் கொள்முதல் செய்வதற்கு சில விதிமுறைகள் உண்டு. எந்தப் பட்டாசு ஆலைக்கு, விதிகளின்படி எவ்வளவு சல்பர் தேவைப்படுகிறது என்பதை சம்பந்தப்பட்ட ரிஜிஸ்டரில் பதிவிட்டு, வருவாய்த்துறையிடம் தடையின்மைச் சான்று பெற்ற பிறகே, கொள்முதல் செய்யமுடியும். இந்தப் பாதுகாப்பு விதிகளை எல்லாம் மீறி, விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் ‘அக்ரி டஸ்டிங் பவுடர்’ என்ற பெயரில் மோசடியாக பில்






கள்ளத்தனமாக சல்பர் வாங்கிய வீட்டில் பட்டாசு தயாரிக்கும்போது வெடி விபத்தின் கோரம்...



சல்பர் மூடைகளுடன் பிடிபட்ட லாரி




அரைத்து பொடியாக்கப்பட்ட சல்பர்

போடப்பட்டு, அரைக்கப்பட்ட சல்பர் பொடி கேரளாவிலிருந்து விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு சர்வசாதாரணமாக லாரிகளில் கொண்டு வரப்படுகிறது.

தொடர்ந்து இதுபோன்ற விதிமீறலில் ஈடுபடக்கூடிய சல்பர் கெமிக்கல்ஸ் உள்ளிட்ட மூன்று கெமிக்கல் நிறுவனங்கள் கேரளாவில் இயங்கி வருகின்றன. மோசடி பில் மூலம் இந்த நிறுவனங்களிடமிருந்து சல்பர் கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், விருதுநகர், சிவகாசி, சாத்தூர், ராஜபாளையம், கோவில்பட்டி ஆகிய ஊர்களில் உள்ளன. அதிக விலை கொடுத்து இந்நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படும் சல்பர் எதற்கெல்லாம் பயன்படுகிறது தெரியுமா?

சட்டத்துக்குப் புறம்பாக கிணற்றுக்கு வெடி வைப்பவர்கள், கள்ளத்தனமாக வீடுகளில் பட்டாசு தயாரிப்பவர்கள், உரிமம் பெற்ற பட்டாசு ஆலைகளை விதிமீறலாக குத்தகைக்கு எடுத்து நடத்துபவர்கள், பேராசை காரணமாக வரையறுக்கப்பட்ட அளவைக் காட்டிலும் பல மடங்கு பட்டாசு உற்பத்தி செய்பவர்கள் எனப் பாதுகாப்பு விதிகளை மதிக்காதவர்களுக்கு, இந்த நிறுவனங்களிடமிருந்து சல்பர் தாராளமாகக் கிடைக்கிறது. எங்கெங்கோ சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களும் இவர்களிடம் சல்பர் வாங்கிச் செல்வதும் நடக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 9-ஆம் தேதி, சாத்தூர்

www.nakkheeran.in



e-Way Bill

e-Way Bill

Doc No. : Tax Invoice - SCPL-286/25-26
Date : 20-Aug-25

1. e-Way Bill Details
e-Way Bill No.: 571863922490
Generated By : 32ABMCS2335J1ZA
Supply Type : Outward-Supply
Mode : 1 - Road
Approx Distance : 325 KM
Transaction Type : Regular
Generated Date : 20-Aug-25 3:13 PM
Valid Upto : 22-Aug-25 11:59 PM

2. Address Details
From
SALFA CHEMICALS PRIVATE LIMITED
GSTIN : 32ABMCS2335J1ZA
Kerala
Dispatch From
186, IDA EDAYAR,BINANIPURAM.P.O. ERNAKULAM
DISTRICT-683502, KERALA
IDA EDAYAR Kerala 683502
To
CHANDRA CHEMICAL
GSTIN : 33AAHFC1787D1ZO
Tamil Nadu
Ship To
41/4-A,MARULUTHU,VIRDHUNAGAR-626003
VIRUDHUNAGAR Tamil Nadu 626003

3. Goods Details

| HSN Code | Product Name & Desc | Quantity | Taxable Amt | Tax Rate (I) |
|---|---|---|---|---|
| 25030010 | AGRI-DUSTING POWDER-50 KG & AGRI-DUSTING POWDER-50 KG | 16 MTS | 5,16,800.00 | 5 |

Tot.Taxable Amt : 5,16,800.00
IGST Amt : 25,840.00
Other Amt :
Total Inv Amt : 5,42,640.00

4. Transportation Details
Transporter ID :
Name :
Doc No. :
Date :
CEWB No. :

5. Vehicle Details
Vehicle No. : TN28AA7339
From : IDA EDAYAR

அக்ரி டஸ்டிங் பவுடர் பெயரில் பில்

அருகே விஜயகரிசல்குளத்தைச் சேர்ந்த பொன்னுபாண்டியனின் வீட்டில் கள்ளத்தனமாகப் பட்டாசு தயாரித்தபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் 3 பேர் பலியாகி, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்சம் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்து வழங்கப்பட்டது. இது மனிதநேயச் செயல் என்றாலும், கள்ளத்தனமாக வீடுகளில் பட்டாசு தயாரிப்பதையும், அங்கு வேலை பார்ப்பவர்களையும் ஊக்குவிக்கும் செயலாக அல்லவா இருக்கிறது என்று இன்னொரு கோணத்தில் விமர்சிக்கப்படுகிறது.

கள்ளத்தனமாக நடத்தப்படும் இந்த சல்பர் வியாபாரத்தை வருவாய்த்துறையோ, காவல்துறையோ கண்டுகொள்வதே இல்லை. ஆய்வு செய்து நடவடிக்கையும் எடுப்பதில்லை. அபாயகரமான சல்பர், தவறானவர்களின் கையில் கிடைப்பதும், வெடி விபத்துகள் ஏற்பட்டு உயிர்கள் பறிபோவதும் வாடிக்கையாகிவிட்டது. மோசடியான சல்பர் வியாபாரத்தை தடுத்து நிறுத்தினாலே போதும். வெடி விபத்துகள் பெருமளவில் குறைந்துவிடும்.

கடந்த 21-ஆம் தேதி, 16 டன் சல்பரை ஏற்றிவந்த லாரியை தனிப்பிரிவு காவல்துறையினர்தான் மடக்கிப் பிடித்துள்ளனர். உண்மையான சரக்கின் (சல்பர்) மதிப்பைக் காட்டிலும் குறைவாக பில் போடப்பட்டிருந்த நிலையில். ரூ.10 லட்சம் வரை பேரம் பேசி, மூன்று அதிகாரிகள் பங்கு பிரித்துக்கொண்டார்களாம். இதுபோன்ற வழக்குகளில், ஆதாயம் கருதி நீக்குபோக்காகவே காவல்துறை நடந்துகொள்கிறது. வழக்கும் நடவடிக்கையும் ஒப்புக்குத்தான்" என்றனர்.

சிறப்பாக சேவையாற்றுகிறார் என விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து சுதந்திர தின விழாவில் நற்சான்றிதழ் பெற்றுள்ள தனிப்பிரிவு சார்பு ஆய்வாளர் ஓவி ரெட்டியை நாம் தொடர்புகொண்டபோது, "சல்பர் லாரியைப் பிடித்துக் கொடுத்ததோடு தனிப்பிரிவு போலீசாரின் வேலை முடிந்துவிட்டது. மற்றபடி எந்த பேரமும் நடக்கவில்லை; யாரும் பணம் வாங்கவும் இல்லை; பங்கு பிரிக்கவும் இல்லை. நான் கண்டிப்பாகவும் நேர்மையாகவும் செயல்படுவதால் என்னால் சிலர் பாதிக்கப்பட்டிருக்கலாம். அந்த டீம் எனக்கு எதிராகச் செயல்படுகிறது. தொடர்ந்து இதுபோன்ற அவதூறான பேச்சுக்கு நான் ஆளானால், இங்கிருந்து மாற்றலாகிப் போய்விட வேண்டியதுதான்" என்று சலித்துக்கொண்டார்.

சந்திரா கெமிக்கல் உரிமையாளர் சந்திரன் மீது வழக்கு பதிவு செய்த சூலக்கரை காவல்நிலைய ஆய்வாளரும் விசாரணை அதிகாரியுமான மாதவன், "இந்த வழக்கு விஷயமாகவோ, வேறு எதுவும் குறித்தோ, என்னுடைய மேலதிகாரியின் அனுமதி இல்லாமல் நான் பேசக்கூடாது. பேரம் நடந்தது குறித்து என்னிடம் கேட்கவேண்டாம். அது எனக்கு சம்பந்தம் இல்லாத விஷயம். நான் வழக்கு பதிவு செய்திருக்கிறேன் அவ்வளவுதான்..." என்று முடித்துக்கொண்டார்.

பட்டாசு வெடி விபத்துகளின்போது சொல்லப்படும் காரணங்களின் உண்மைத்தன்மை பற்றியும், சம்பந்தப்பட்ட அனைத்து அரசுத்துறையினரும் பட்டாசு விவகாரங்களில் அடைந்துவரும் அதீத ஆதாயங்கள் குறித்தும், ஆதி முதல் அந்தம் வரை தோண்டியெடுத்து கடுமையான நடவடிக்கைகளை இந்திய ஒன்றிய அரசும், தமிழக அரசும் எடுத்தால் மட்டுமே, பட்டாசுத் தொழிலாளர்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு கிடைக்கும்.

சட்டவிரோதமான சல்பர் புழக்கம் நாட்டின் பாதுகாப்புக்கே சவால்விடுமளவு அபாயகரமானது!

**-ராம்கி**

தி.மு.க. முகாமில்



அ.தி.மு.க. விழாவில்



# ஆடு புலி ஆட்டத்தில் தி.மு.க.-அ.தி.மு.க.!

## -விழுப்புரம் மாவட்ட நிலவரம்!

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டுசேர்ப்பதில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் மிகத்தீவிரமாக களப்பணி ஆற்றிவருகிறது. கட்சியின் மாநிலத் தீர்மானக் குழு உறுப்பினரும் தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினரான செஞ்சி சிவா இதில் மிகவும் அக்கறை செலுத்திவருகிறார்.

கடந்த 2020-ஆம் ஆண்டு 'எல்லோரும் நம்முடன்' என்ற அடிப்படையில் தி.மு.க.வின் உறுப்பினர் சேர்க்கை முகாம்கள் நடைபெற்றன (தற்போது அதையே மாற்றி 'ஓரணியில் தமிழ்நாடு' என்று உறுப்பினர் சேர்க்கை நடைபெறுகிறது) அதேபோல் தற்போது தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு அரசுவழியாக என்னென்ன சலுகைகள் கிடைக்கும், அதன்மூலம் எவ்வளவு பலன் ஏற்படுகிறது என்பதை மயிலம், மரக்காணம், செஞ்சி, திண்டிவனம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் முகாம் அமைத்து உடலுழைப்பு தொழிலாளர்களை வரவழைத்து உறுப்பினராகச் சேர்த்துள்ளதோடு அதிகாரிகளுடன் இணைந்து சலுகைகள் கிடைக்க வழிவகை செய்துள்ளார்.

இதுகுறித்து நலவாரிய உறுப்பினர் செஞ்சி சிவா, "குறிப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த அனைத்து திட்டங்களையும் சலுகைகளையும் கொண்டுசென்று சேர்த்துள்ளோம். இந்த முகாம் நிகழ்ச்சிகளில், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி கணேசன் உட்பட பலர் வந்து கலந்துகொண்டனர். சுமார் 137 கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. தொழிலாளர் நல வாரியத்தில் 6000 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு அடையாள அட்டைகள் பெற்றுள்ளனர். இந்த முகாம் முடிந்த பின் அரசு, 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்" என்கிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.வில் மக்களை சந்தித்து அரசுத் திட்டங்களை கொண்டுசேர்க்கும் தீவிர செயல்பாடுகளைப் பார்த்த அ.தி.மு.க. மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சி.வி. சண்முகம், ஜெயலலிதாவின் 77-ஆம் ஆண்டு பிறந்த நாளை கொண்டாடும்வகையில் மயிலம், வல்லம், ஒலக்கூர், கூட்டேரிப்பட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களுக்கு 'அம்மா சாம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டி' என்று பெயர்வைத்து, அந்த போட்டிகளைத் தொடர்ந்து பல்வேறு கிராமப் பகுதிகளில் நடத்தி அதில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகளை வாரி வழங்கிவருகிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும் கட்சியினரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தொகுதிகளைக் கைப்பற்றும் நோக்கத்தில் ஆடு-புலி ஆட்டத்தை நடத்தி வருகின்றனர்.

**-எஸ்.பி.எஸ்.**

www.nakkheeran.in



தமன்னா

## ரீ-என்ட்ரி!

பாலிவுட்டில் அமீர்கானுக்கு ஜோடியாக 'சிதாரே ஜமீன் பர்' படத்தில் நடித்தது மூலம் மீண்டும் பிஸியான ஜெனிலியா, கடந்த மாதம் தெலுங்கு மற்றும் கன்னடத்தில் வெளியான 'ஜூனியர்' படத்தில் முக்கிய மான கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். தமிழிலும் நடிக்க ஆர்வமுள்ளதாக அவர் தெரிவித்திருந்ததையடுத்து, மீண்டும் தமிழுக்கு அழைத்து வரும் முயற்சியில் கோலிவுட் பட இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஈடு பட்டனர். தற்போது தனுஷிடமிருந்து அழைப்பு வர, அதற்கு க்ரீன் சிக்னல் கொடுத்துள்ளார் ஜெனி லியா. பாலிவுட்டிலும்

www.nakkheeran.in

தனுஷுக்கு மார்க்கெட் இருப்பதால் தமிழுக்கும் இந்திக்கும் இந்த படம் சரியாக இருக்கும் என யோசித்தே உடனே ஓ.கே. சொன்னாராம்.

## இவரு புதுசு!

வினோத் -விஜய் கூட்டணியில் உருவாகிவரும் 'ஜனநாயகன்', படப்பிடிப்பு முடிந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்துவருகிறது. இன்னும் சில பேட்ச் ஒர்க்குகள் இருக்கிறதாம். விஜய்யின் கடைசிப் படமாக பார்க்கப்படும் இப்படத்தில் ஏற்கனவே அவருக்கு விடை கொடுக்கும் வகையில் அவருக்கு நெருக்கமான இயக்குநர்களான அட்லீ, நெல்சன், லோகேஷ் கனகராஜ் ஆகியோர் கேமியோ ரோலில் நடித்துள்ளனர். இவர்கள் பத்திரிகையாளர்களாக வருகின்றனர். இவர்களைத் தொடர்ந்து தற்போது விஜய்க்கு நெருக்கமான இன்னும் இரண்டு பேரும் படத்தில் தலை காண்பிக்கிறார்கள். ஒருவர் விஜய்யின் நீண்டகால நம்பிக்கைக்குரிய அவரது கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மற்றொருவர் விஜய்யின் சமீபத்திய படங்களுக்கு அதிகம் இசையமைத்துள்ள அனிருத்.



## கவர்ச்சி ரூட்டு!

சமீபகாலமாக கவர்ச்சியில் தாராளம் காட்டிவரும் தமன்னா, தற்போது அந்த ரூட்டிலே தொடர்ந்து பயணிக்க முடிவெடுத்துள்ளார். அதாவது இதுவரை சில காட்சிகள் மற்றும் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் என கவர்ச்சி காட்டிய தமன்னா, இப்போது கவர்ச்சியுடன் கூடிய முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். இந்தியில் ராஜ்குமார் ராவ், கைனஸ் மோடிவாலா ஆகியோர் நடிப்பில் 2011ஆம் அண்டு வெளியாகி ஹிட்டான படம் 'ராகிணி எம்.எம்.எஸ். அடல்ட் ஹாரர் ஜானரில் உருவான இப்படத்தின் இரண்டாம் பாகத்தில் சன்னிலியோன் நடித்திருந்தார். இந்த படமும் ஹிட்டடிக்க தற்போது மூன்றாம் பாகம் உருவாகிறது. இதில்தான் தமன்னா, நடிக்கவுள்ளார். இப்படம் முந்தைய படங்களைப்போல் அடல்ட் ஹாரராக இல்லாமல் ஹாரர் காமெடி ஜானரில் உருவாகிறது. படப்பிடிப்பு இந்தாண்டு இறுதியில் திட்டமிடப்பட்டுள்ளது. சன்னி லியோன் நடித்த படத்தின் அடுத்த பாகத்தில் நடிப்பதால், தனது கவர்ச்சி ரூட்டுக்கு இது மேலும் வலுச்சேர்க்கும் என நம்புகிறாராம் தமன்னா.

## நியூ என்ட்ரி!

ரஜினிகாந்த் தனது அடுத்த படத்திற்கு ஏகப்பட்ட இயக்குநர்களை அணுகிவந்தார். இதில் அ.வினோத், எஸ்.யு. அருண்குமார், நித்திலன் சாமிநாதம், சிறுத்தை சிவா உள்ளிட்ட பெயர்களும் இருந்தன. தெலுங்கு இயக்குநர் விவேக் ஆத்ரேயே பெயரும் இருந்தது. தற்போது மற்றொரு தெலுங்கு இயக்குநர் நாக்அஷ்வின் பெயரும் அடிபடுகிறது. சமீபத்தில் ரஜினியை சந்தித்தவர், ஒரு ஒன்லைனை சொல்லியுள்ளார். ரஜினியும் அதைக் கேட்டு பாராட்டு தெரிவித்து, முழுக்கதையாக டெவலப் செய்யச் சொல்லியுள்ளார். இவர் கீர்த்தி சுரேஷை வைத்து தேசிய விருது வென்ற 'மகாநதி' (தமிழில் -நடிகையர் திலகம்) படத்தை இயக்கியவர். கடைசியாக அமிதாப் பச்சன், பிரபாஸ் உள்ளிட்டோர் நடிப்பில் ரூ.1000 கோடிக்கும் மேல் வசூலித்த 'கல்கி 2898 ஏடி' படத்தை இயக்கியிருந்தார். அந்தப் படத்தில் கமல் வில்லனாக... சில காட்சிகளில் வித்தியாசமான தோற்றத்தில் தோன்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**-கவிதாசன் ஜெ.**

நிம்மதியில்லாத புத்திசாலியைவிட
கவலையில்லாத பைத்தியம் மேல்!

## நிழல் உலகின் நிஜங்கள்! 10

# மாணிக்கமும் பாட்ஷாவும்!

**நா**ன் சொல்லப்போகும் சேதி பாட்ஷாவாக இருந்து மாணிக்கமாக மாறிய எம்.ஏ.வேணுவைப் பற்றியது.

சேலம் டவுனில் பிறந்தவர் எம்.ஏ.வேணு. இவருக்கு ராதா, சுந்தரேசன் என இரு தம்பிகள். வீட்டிற்கு மூத்தபிள்ளை என்பதால் அவரது பெற்றோர் அதிக செல்லம் கொடுத்தனர். நல்ல கல்வியையும் கொடுக்க நினைத்தனர். ஆனால் வேணுவோ மூணாவது படிக்கும்போதே படிப்புக்கு முழுக்குப் போட்டார். மூத்த மகனால் மனம் கலங்கிய அவரது பெற்றோர், மற்ற மகன்களை நன்றாகப் படிக்கவைக்கும் முயற்சியில் இறங்கி, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர்.

மூணாவதோட படிப்பு நின்னு போச்சுன்னா என்னாகும்? சேரக்கூடாத சேர்க்கையெல்லாம் தேடிவரும். ஆகாத காரியமெல்லாம் அதுவா நடக்கும். அதுதான் வேணுவுக்கும் நடந்துச்சு. பத்து, பன்னிரெண்டு வயசுலேயே பகலில் ஊர் சுற்றியானார் வேணு. உடன் சுற்றியவர்களோ இவரைப் போலவே படிப்புக்கு பால் ஊற்றியவர்கள், ஊதாரிகள். ராப்பொழுதுதான் வீட்டுக்கு வருவார் வேணு. இவரை நினைத்து வெறுப்பிலும் வேதனையிலும் கைபிசைந்து நின்றனர் பெற்றோர். ராப்பொழுது வீட்டுக்குள் நுழைந்ததுமே அடாவடியை ஆரம்பித்துவிடுவார் வேணு.

தம்பிகள் ரெண்டு பேருக்கும் சோற்றில் பருப்புடன் நெய் ஊற்றி பெற்றோர் பிசைந்து கொடுக்க, வேணுவுக்கு வெறும் சோறு, மோர், ஊறுகாய்தான். ‘ஏம்மா எனக்கு மட்டும் இப்படி?’ என வேணு கேட்டால்... ‘ஆமா நீ கெட்டகேடுக்கு நெய் ஒண்ணுதான் கேடு. காலையில வீட்டைவிட்டுப் போற. கண்ட காலிப்பயலுகளோட சுத்திட்டு ராத்திரியானதும் வீட்டுக்கு வர்ற. ஒனக்கு வெறும் சோறும் மோருமே ஜாஸ்தி. இத திங்கிறதுன்னா தின்னு, திங்காட்டி போ’ என அம்மாவிடமிருந்து ஆவேச வார்த்தைகள் கொட்டும்.

‘ஓஹோ கதை அப்படிப் போகுதோ . கொஞ்சோண்டு நெய் சோத்துக்கு இம்புட்டுப் பேச்சு, காலிப்பய பட்டம் வேற. நெசமாவே நாம காலிப்பயலாகிட்டா நெய் சோறென்ன, பால் சோறு, தேன் சோறே சாப்பிடலாம்...’ என மனசுக்குள் கணக்குப் போட்ட வேணு, பதினேழு, பதினெட்டு வயசுல உண்மையான ரவுடியாகவே மாறிவிட்டார்.

சேலம் நகரில்
ரவுடி. இதனால் ப
வேணுவிடம் வந்து
களைகட்ட ஆரம்பித்தது. வேணு ஆ
விரும்பிய சோறும் சாப்பிட்டார், வே
செய்ய ஆரம்பித்தார். இப்படியே
நிலையில், ரவுடிகள் ராஜ்ஜியத்தின் மீ
பெறுவதற்காக மாடர்ன் தியேட்
மரத்தின் கீழ் ஒதுங்கினார் வேணு.

அவ்வளவு சீக்கிரம் அந்த மரத்தின் கீழே உட்கார்ந்துர முடியுமா? மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் என்ன அம்புட்டு லேசுப் பட்ட ஆளா? லேசுல உட்கார விட்ருவாரா? மாடர்ன் தியேட்டர் ஸுங்கிறது மிலிட்டரி காம்பவுண்ட் மாதிரி. அதுல டி.ஆர்.எஸ். ட்ரில் வாங்கும் டிரெய்னிங் ஆபீசர். அங்கே என்ட்ரியாகும் ஹீரோ-ஹீரோயின்களே சுந்தரத்தைக் கண்டாலே கப்-சிப்பாகி விடுவார்கள்.


‘மந்திரிகுமாரி’ படத்தில்

www.nakkheeran.in



# டைரக்டர் ஷாலப்பா

ல் இவர் ஒரு செலக்டிவ்
ல சில்லறை ரவுடிகளும்
சேர, அவர்களின் கச்சேரி
பூசைப்பட்டது போலவே
ண்டாத வேலைகளையும்
நாலஞ்சு வருசம் போன
து வெறுப்பு வந்து ஞானம்
டர்ஸ் என்ற போதி



ஆக்ஷனெல்லாம் சர்வாதிகாரி போல இருந்தாலும் அரவணைப்பில் சிறந்த ஜனநாயகவாதி என்பதால் மாடர்ன் தியேட்டர்ஸின் கடைநிலை ஊழியர்களிலிருந்து அங்கே சம்பளம் வாங்கும் ஹீரோ, ஹீரோயின்கள் வரை சுந்தரத்தின் மீது சுத்தமான மரியாதை வைத்திருந்தார்கள். இப்படிப் பட்ட ஜனநாயக சர்வாதிகாரி சுந்தரத்தின் தினசரி நடவடிக்கைகளைக் கவனிக்க ஆரம்பித்தார் வேணு. அதிகாலை மாடர்ன் தியேட்டர்ஸுக்குள் சுந்தரம் நுழைவதிலிருந்து இரவு வெளியேறும் வரையும் வெளியே காத்திருந்து வாட்ச் பண்ணினார். அதன்பின் ஸ்டுடியோவின் வாட்ச்மேனிடம் நைசாகப் பேச்சுக் கொடுத்து ஸ்டுடியோவுக்குள் சுந்தரத்தின் நடவடிக்கைகளையும் பக்காவாகத் தெரிந்துகொண்டார்.

இதையெல்லாம் சுந்தரமும் வாட்ச் பண்ணாம இருப்பாரா?

'யாரு இவன், காலையிலேயே வந்து ஸ்டுடியோ கேட்ல நிக்கிறான். ராத்திரி நாம போற வரைக்கும் நிக்கிறான்' என நினைத்தபடியே ஸ்டுடியோவுக்குள் போயிருப்பார் போல. போனதும் வாட்ச்மேனைக் கூப்பிட்டு விவரம் கேட்க, நடந்ததை வாட்ச்மேனும் சொல்ல... 'இப்ப அவன் அங்க நின்னுக்கிட்டிருந் தான்னா உடனே உள்ளே வரச்சொல்லு' என உத்தவிட்டார் சுந்தரம்.

விழுந்தடித்து ஓடி வந்தார் வாட்ச்மேன். 'தம்பி உன்னை ஐயா கூப்பிடுறாரு' என வாட்ச்மேன் சொன்னதுமே சிட்டாகப் பறந்து போய் சுந்தரத்தின் முன்னால் கைகட்டி நின்றார் வேணு.

ஏகப்பட்ட கேள்விகள், சோதனைகளுக்குப் பிறகு ஸ்டுடியோவில் தயாரிப்பு உதவியாளராக வேணுவுக்கு வேலை கொடுத்தார் டி.ஆர்.சுந்தரம். தனது சுறுசுறுப்பாலும், விசுவாசத்தாலும் தொழில் பக்தியாலும் விறுவிறுவென வளர்ந்து தயாரிப்பு மேலாளர் என்ற நிலைக்கு உயர்ந்தார் வேணு. இன்னும் சொல்லப்போனால் டி.ஆர்.சுந்தரத்திற்கு அடுத்து மாடர்ன் தியேட்டர்ஸில் வேணுதான் ட்ரில் மாஸ்டர், ஸ்ட்ரிக்ட் ஆபீசர். சுந்தரத்தைவிட வேணுவைப் பார்த்தாலே எல்லோருக்கும் வேர்த்துக் கொட்டிவிடும். அது ஆபீஸ்பாயாக இருந்தாலும் சரி, ஆகப்பெரிய ஹீரோவாக இருந்தாலும் சரி, வேணு சொல்லுக்கு வேறு சொல் பேசக்கூடாது.

பாட்ஷாவாக இருந்து மாணிக்கமாக மாறிய பின்புதான் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் கலைஞர் வசனத்தில் 'மந்திரிகுமாரி' மூலம் எம்.ஜி.ஆரை ஹீரோவாக்கினார் வேணு. குண்டலகேசி காப்பியத்தைத் தழுவி கலைஞர் வசனம் எழுதி பலமுறை அரங்கேறிய நாடகம் 'மந்திரிகுமாரி'. தனது 25-ஆவது வயதில் கலைஞர் எழுதிய வசனங்களால் 'மந்திரிகுமாரி'




மார்டன் தியேட்டர்ஸ் முகப்பு

நாடகம் மகத்தான சாதனை வெற்றி பெற்றது.

அப்போது எம்.ஜி.ஆர். சிறு, சிறு வேடங்களில் நடித்துக் கொண்டிருந்த காலம். வேணுவைப் பார்க்க மாடர்ன் தியேட்டர்ஸுக்கு அடிக்கடி வருவார் எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணி. அப்படி வரும்போதெல்லாம் 'தம்பி ராமச்சந்திரன் கதாநாயகனாகுறதுக்கு நீங்கதான் மனசு வைக்கணும்ணே' என வேணுவிடம் கேட்டுக் கொண்டே இருப்பார் சக்கரபாணி.

ஒருநாள் வேணுவைச் சந்தித்த கவிஞர் கா.மு.ஷெரீப், 'மந்திரி குமாரி' நாடகத்தைப் பற்றி ரொம்பவே சிலாகித்துப் பேசிவிட்டு, 'நீங்களும் டி.ஆர்.சுந்தரமும் அந்த நாடகத்தைக் கண்டிப்பா பார்க்கணும்' எனச் சொல்லிவிட்டார்.

வேணு இதைப் பத்தி சுந்தரத்திடம் சொல்ல, சுந்தரமும் சம்மதம் சொல்லிவிட்டார். நாடகம் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் கா.மு.ஷெரீப். சுந்தரம், வேணு, கா.மு.ஷெரீப் ஆகிய மூவரும் நாடகத்தைப் பார்த்தனர்.

பார்த்து முடித்ததுமே கலைஞரைக் கூப்பிட்ட சுந்தரம், அதை சினிமாவுக்காக மாற்றி எழுதும்படி சொல்ல, அதன்பின் தயாரான 'மந்திரிகுமாரி'யில் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக்கினார் வேணு. சக்கரபாணியின் மனசெல்லாம் சந்தோஷம்.

முதன்முதலில் ஹாலிவுட் டைரக்டர் எல்லீஸ் ஆர்.டங்கனை தமிழ் சினிமாவுக்கு அழைத்து வந்தவர் டி.ஆர்.சுந்தரம்தான். மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் பல படங்களை டைரக்ட் பண்ணினார் டங்கன். 1950 ஜூன் மாதம் வெளியான 'மந்திரிகுமாரி'தான் எல்லீஸ் ஆர்.டங்கனின் கடைசிப்படம். இதை சுந்தரமும் டங்கனும் சேர்ந்து டைரக்ட் பண்ணியிருந்தார்கள்.

ஒரு நாள்... சுந்தரத்தின் சுடு சொற்களால் சுரீரென கோபம் வந்துவிட்டது வேணுவுக்கு. அதுக்குப் பிறகு...?

**(வெளிச்சம் பாயும்)**

## நக்கீரன் ரீல் -மோடிக்கு மெயில்

4-ஆவது அத்தியாயத்தில் மரவேலை செஞ்சுக்கிட்டிருந்த ஒரு தொழிலாளியை டி.ஆர்.சுந்தரம் செருப்பால் அடித்ததை எழுதியிருந்தேன்லயா. கடந்த வாரம் அதே சேலத்திலிருந்து எனது செல்போனுக்கு வந்தவர், 'அய்யா என்பேரு பாலசுப்பிரமணியன். சுந்தரம் அய்யாவிடம் செருப்படி வாங்கியது நான் தான். அப்ப அவர் செஞ்ச காரியம் எனக்கு கோபத்தை ஏற்படுத்துச்சு. ஆனா ஆடம்பரம் பத்தி அவர் சொன்னது என் மனசுக்குள்ள மாற்றத்தை ஏற்படுத்துச்சு. ஆடம்பரத்தைக் குறைச்சு, அவசியத்திற்கு மட்டும் பணம் செலவழிச்சதால் என் பிள்ளைகளை நல்ல படியா படிக்க வச்சேன். இப்ப நிம்மதியா இருக்கேன்' என்றார்.

இதேபோல் 7-ஆவது அத்தியாயத்தில் திருவிளையாடல் படத்தில் கடவுள் பரமசிவன் பாடும் 'பாட்டும் நானே... பாவமும் நானே...' பாடலை கவிஞர் கா.மு.ஷெரீப் எழுதியதையும் படத்தின் இணைத் தயாரிப்பாளராக ஏ.எம்.ஷாகுல் ஹமீது என்பவர் இருந்ததையும் எழுதி, இதான்யா தமிழ்நாடு என்பதை பதிவு செய்திருந்தேன்.

இதழ் வெளியான மறுநாளே மதுரையிலிருந்து தொடர்புகொண்ட வக்கீல் ஒருவர், 'அண்ணே நீங்க எழுதுனதை அப்படியே ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செஞ்சு பிரதமர் மோடிக்கு மெயில் அனுப்பிச்சுட்டேன்' என்றார். அந்த வக்கீல் இஸ்லாமியரோ, கிறிஸ்தவரோ அல்ல.



எம்.ஏ.வேணுவுடன் ஷாலப்பா

அடுத்தவர் உணர்வுகள் மதிக்கப்படும் இடத்தில் உறவுகள் எல்லையற்ற உயர்வடைகிறது!



Dia BOOSTER
a Food Supplement
IMPROVES ENERGY, STRENGTH, STAMINA
72 Hours
டயா பூஸ்டர் ™
சர்க்கரை நோயாளிகளின் அக்கறையான உணவு
கேப்சூல் வடிவில்
MONEY BACK 100% GUARANTEED
டயா பூஸ்டர் ஒரு சர்க்கரை நோய்கான உத்தரவாதம்
சர்க்கரை நோய்க்கு Bye Bye சொல்லுங்கள், டயா பூஸ்டருடன்.
72 மணி நேரத்தில் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுக்குள் கொண்டு வருகிறது..
மேலும் தொடர்புக்கு
78 23 99 7001 | 78 23 99 7004
ஜிங்கா கோல்டு
Jinga Gold
IT ONLY TAKES ONE
4 CAPSULES
GMP
ISO
4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY VISHWAM
MedPlus
ஒன்னு போதும் நின்னு பேசும்!
அப்பலோ, மெட்ப்ளஸ் உட்பட அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்
Super stockist Sruti's
ஜிங்கா கோல்டு
ஹெல்ப் லைன்
9962 66 4444
மாவட்ட வாரியான உதவிக்கு
9003640742
For Personal Delivery
9962 8080 90


Advt


அக்ரி கிருஷ்ணமூர்த்தி


சரவணன்


ஸ்ரீதரன்


செங்கம் குமார்


பன்னீர்செல்வம்


அஸ்வத்தாமன்

# கலக்கத்தில் கட்சிகள்!

## –கலசப்பாக்கம் தொகுதி நிலவரம்!

**திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள கலசப்பாக்கம் தொகுதியில் உடையார்கள், வன்னியர்கள், பட்டியலின சமூக மக்கள் அதிகம் வசிக்கின்றனர். தி.மு.க.வின் வலிமையான தொகுதிகளில் ஒன்றாக இத்தொகுதி இருந்தது. 1972 தேர்தலில் தி.மு.க. எஸ்.முருகையன் இத்தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.வானார்.**

வெளியூரைச் சேர்ந்தவருக்கு எப்படி சீட் தரலாம் என கலசப்பாக்கம் தி.மு.க.வில் பிரபலமாகயிருந்த சுந்தரேசன் அதிருப்தியாகி எம்.ஜி.ஆர். தொடங்கிய அ.தி.மு.க.வில் சேர்ந்து வேட்பாளரானார். தி.மு.க. சார்பில் பெ.சு.திருவேங்கடம் என்ற இளைஞரை களமிறக்கினார் கலைஞர். கடும் போட்டியில் திருவேங்கடம் வெற்றிபெற்றார். அதன்பின் 1980, 1989, 1996 என நான்கு முறை இத்தொகுதியில் வெற்றிபெற்றார்.

இதே காலகட்டத்தில் அ.தி.மு.க. சுந்தரேசன் தனது மகன் அக்ரி.கிருஷ்ணமூர்த்தியை அரசியலில் நுழைத்தார். 2006, 2011-ல் அக்ரி.கிருஷ்ணமூர்த்தி கலசப்பாக்கம் தொகுதியில் நிறுத்தப்பட்டார். அப்போது தி.மு.க.வில் கூட்டணிக்கு ஒதுக்கியதால் தி.மு.க.விலுள்ள சாதிப் பற்றாளர்களின் ஆதரவில் வெற்றிபெற்று எம்.எல்.ஏ.வாகி, அமைச்சரானார் அக்ரி. பின்னர் அரசு அதிகாரி தற்கொலை விவகாரத்தில் அக்ரி.கிருஷ்ணமூர்த்தி சிறைக்குப் போனதால் அரசியலில் ஒதுக்கப்பட்டு 2016-ல் அ.தி.மு.க. பன்னீர்செல்வத்துக்கு சீட் தரப்பட்டது. அப்போது தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் நின்றது, அ.தி.மு.க. பன்னீர்செல்வம் வெற்றி பெற்றார்.

## உடனிருப்பவர்களுக்கு உறுதுணையாக இருங்கள் -இன்று நீங்கள் செய்யும் சிறு உதவி, நாளை பலரின் எதிர்காலத்தையே மாற்றலாம்!

தொடர்ந்து நான்காவது முறையாக அ.தி.மு.க. வெற்றிபெற்றதால் 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு தொகுதிப் பொறுப்பாளராக தனது மகன் டாக்டர்.கம்பனை களமிறக்கினார் தி.மு.க. மா.செ. வேலு. சீனியரான பெ.சு.திருவேங்கடம், துரிஞ்சாபுரம் ஒ.செ.வாக உள்ள தன் மகன் சரவணனுக்கு, கலசப்பாக்கம் தொகுதியில் போட்டியிட சீட் வாங்கித் தாங்க என வேலுவிடம் கெஞ்சிக் கேட்டதால் சரவணனுக்கு சிபாரிசு செய்து சீட் வாங்கித் தந்து வெற்றி பெறச்செய்தார்.

தற்போது இத்தொகுதி எம்.எல்.ஏ.வாகவுள்ள சரவணன், கலசப்பாக்கம், ஜம்னாமரத்தூர், புதுப்பாளையம் ஒன்றியங்களில் சில பணிகளைச் செய்திருந்தாலும் சாதி பார்த்தே செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டுள்ளது. மீண்டும் அவர் போட்டியிட்டால் தோல்வியடைவார் எனச் சொல்லுமளவுக்கு நிர்வாகிகளிடம் அதிருப்தியை சம்பாதித்துள்ளார். புதுப்பாளையம் ஒன்றியக் குழு தலைவராக பொதுப்பிரிவு, பட்டியலினப் பிரிவில் நான்கு முறை பதவியிலிருந்த தி.மு.க. ஒ.செ. சுந்தரபாண்டியனுக்கு பல நெருக்கடிகளைத் தந்தவர், தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரே ஆண்டில் 3 முறை பி.டி.ஓ.க்களை மாற்றி சேர்மனை டார்ச்சர் செய்துள்ளார். உச்சமாக பெண் ஊழியர் ஒருவர்மூலம் சேர்மன் மீது பொய்யாக பாலியல் புகார் தர முயற்சி செய்து அவரின் பலத்த எதிர்ப்பை சம்பாதித்துள்ளார்.

ஜம்னாமரத்தூர், கலசப்பாக்கம் ஒ.செ.க்களை கேவலமாக நடத்துகிறார். சுமார் 300 கோடி ரூபாய்க்கு மேலான ஒப்பந்தப் பணிகளை எம்.எல்.ஏ.வுக்கு தந்துள்ளார் அமைச்சர் வேலு. அதில் 80 சதவிகித வேலைகளை எம்.எல்.ஏ.வும், அவரது பினாமிகளுமே செய்துள்ளனர். ஆனால் சம்பாதிக்கவில்லை எனச் சொல்லி கட்சிக்காக பெரியதாக எதையும் செலவுசெய்யவில்லை என்கிறார்கள் கட்சி நிர்வாகிகள்.

தொகுதி நிலவரம் குறித்து முதலமைச்சர் ஸ்டாலினுக்குச் சென்ற ரிப்போர்ட்களின் அடிப்படையில் இத்தொகுதி ரெட் பட்டியலில் இருப்பதால் சில வாரங்களுக்கு முன்பு அமைச்சர் வேலு, கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட நிர்வாகிகளை அழைத்துப்பேசியுள்ளார். அப்போது சரவணன் - சுந்தரபாண்டியன் இடையே பஞ்சாயத்து பேசி சமாதானம் செய்துள்ளார். தனக்குதான் சீட் என தலைமை சொல்லிவிட்டது எனச் சொல்லி இப்போதே மக்களிடம் அக்ரிக்கு எதிரான பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டார் சரவணன். எனக்கொரு வாய்ப்பு வாங்கித் தாங்க என தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் சேர்மன் ஸ்ரீதரன் அமைச்சரிடம் கேட்கும் முடிவில் உள்ளதாகக் கூறுகின்றனர். கலசப்பாக்கம் வடக்கு ஒ.செ. படவேடு சேகரிடம் சீட் கேட்கச்சொல்லி சிலர் கூறிவருகின்றனர். கலசப்பாக்கம் முன்னாள் சேர்மன் அன்பரசியின் கணவர் ராஜசேகரன் தனது மனைவி பெயரில் கேட்கவுள்ளார் என்கிறார்கள்.

அ.தி.மு.க.வில் போளூர் தொகுதி எம்.எல்.ஏ.வாகவுள்ள முன்னாள் அமைச்சர் அக்ரி.கிருஷ்ணமூர்த்தி, தனக்கு கலசப்பாக்கம் வேண்டுமென முயற்சிக்கிறார். அ.தி.மு.க. ஆட்சி அமைந்தால் நான் வலிமையான அமைச்சர், எதிர்த்தரப்பு வெற்றிபெற்றால் வெறும் எம்.எல்.ஏ. யாருக்கு ஆதரவுங்கறதை நீங்களே யோசிங்க என தன் சாதியின் முக்கிய பிரமுகர்களிடம் பேசிவருகிறார். கடந்த தேர்தலின்போது இத்தொகுதியில் நின்ற பன்னீர்செல்வத்தை, அக்ரியின் ஆதரவாளர்கள் தேர்தல் வேலைசெய்யாமல் ஒதுங்கியதால் தோற்றுப்போனார். என்னை தோற்கடிச்சதே அக்ரிதான் என தலைமையிடம் புகார் சொன்னார். இந்தமுறை நான் கண்டிப்பா ஜெயிப்பேன் எனக்கு சீட் தாங்க என இ.பி.எஸ்.ஸிடம் போராடிவருகிறார்.

இத்தொகுதியில் மூன்று முறை காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. கணிசமாக யாதவர் வாக்குகள் உள்ளதால் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் செங்கம் குமார் இத்தொகுதி மீது கண்வைத்துள்ளார். வன்னியர் அதிகமுள்ள இத்தொகுதியில் நாம் நிற்கலாம் என பா.ம.க. நிர்வாகிகள் அன்புமணியிடம் கூறியுள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. அதிகம் ஓட்டு வாங்கிய தொகுதி கலசப்பாக்கமாம். பா.ஜ.க. இத்தொகுதியை ஒதுக்கக் கேட்டு அ.தி.மு.க.விடம் பட்டியல் தந்துள்ளது. எம்.பி தேர்தலில் தோற்ற வழக்கறிஞர் அஸ்வத்தாமன் நிற்க வாய்ப்புள்ளது.

**-து. ராஜா**

படங்கள்: எம்.ஆர்.விவேகானந்தன்

www.nakkheeran.in

# அதிகாரிகள் தப்பிக்கவே ஆவணங்கள் அழிப்பு!

**தகவல் அறியும் உரிமைச் சட்டமும் ஊழல் ஆவணங்கள் அழிப்பும்:** சிறை கண்காணிப்பாளர்கள் மற்றும் ரேஞ்ச் DIG-களுடன், சிறை IG வீடியோ கான்பரன்சிங் மூலம் சிறை DGP அலுவலகத்திலிருந்து மீட்டிங் நடத்தினார். அப்போது, பழைய ஆவணங்கள் குப்பைபோல் குவிந்துள்ளதால் அதனை அழிக்கவேண்டும் என சிறை கண்காணிப்பாளர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சிறை DGP சுற்றறிக்கை எண்: TNPCS/ 4870/2025-ES-1, நாள்: 24.07.2025-ன்படி அலுவலக நடைமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள கால அளவுகளின்படி அனைத்து ஆவணங்களையும் ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குள் அழிக்க உத்தரவிடப்பட்டது. மேலும், ஆவணங்களை அழிப்பது குறித்து சிறை IG-க்கு கடிதம் அனுப்பி, உரிய அனுமதிபெற்று அழித்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆவணங்களைத் தேடி எடுத்து அடுக்கி, அதனை கடிதத்தில் பட்டியலிட்டு அனுமதி பெற, இன்னும் கால அவகாசம் வேண்டுமென்று சிறை கண்கணிப்பாளர்கள் கோரியுள்ளதால், இன்றுவரை ஆவணங்கள் அழிக்கப்படவில்லை. ஆனால், அழிப்பதற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஆவணங்களை அழிக்கவேண்டும் என்ற கோரிக்கை தற்போது ஏன் வைக்கப்பட்டுள்ளது? சிறைத்துறையில் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக ஊழல் நடந்துள்ளதை, ஆதாரங்களுடன் நக்கீரன் இதழ் தொடராக வெளியிட்டு வரும் நிலையில், பத்தாண்டு கால ஆவணங்கள் இருந்தால்தானே நடவடிக்கை எடுக்க முடியும்? என்ற உள்நோக்கத்துடன், ஆவணங்களை அழிப்பதற்கு சிறை DGP-யிடம் வேறு ஏதோ காரணங்களை முன்வைத்து அனுமதி பெற்றுள்ளனர்.


எந்தெந்த ஆவணங்களை எவ்வளவு நாள் வைத்திருக்காலாம் என தமிழ்நாடு அலுவலக நடைமுறை விதிகள் மற்றும் சிறை நடைமுறை விதிகளில் (பகுதி: 56/1983, 54/2024) குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தான் ஆவணங்களை வைத்திருப்பார்கள். அதன்பிறகு அதனை அழித்துவிடுவார்கள்.


தமிழக அலுவலக நடைமுறை விதிகளின்படி பெரும்பாலான ஆவணங்களைச் சேமித்துவைக்கும் காலம் 3 ஆண்டுகள்தான். அதற்கு முந்தைய ஆண்டுகளில் உள்ள ஆவணங்களை அழித்துவிட்டால், யார் எந்த விசாரணைக்காகக் கோரினாலும், அல்லது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்டாலும், இந்த ஆணைகளின்படி ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டன எனக் குறிப்பிட்டு, எந்த ஆவணத்தையும் வழங்காமல் தப்பித்துக்கொள்ள முடியும் அல்லவா?

தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 4(1)(a)- ன் படி, அனைத்து ஆவணங்களையும் மின்னணு ஆவணமாக மாற்ற வேண்டும் என்றும், பிரிவு 4(1)(b)-ன்படி ஒவ்வொரு வருடமும் பொது அதிகார அமைப்பு (அரசு அலுவலகம்) தாமாக முன்வந்து ஆவணங்களை பதிவேற்றம் செய்யவேண்டும் என்றும், பிரிவு 8(3)-ன்படி 20 வருடங்களுக்குள் இருக்கும் தகவல்களைத்தான் கேட்டுப் பெறவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

சிறைத்துறையினரோ, கடந்த 20 வருடங்களுக்கான எந்த ஆவணங்களையும் கணினியில் SCAN செய்து மின்னணு ஆவணமாகச் சேமித்துவைக்காமலும், ஒவ்வொரு வருடமும் சிறையில் செய்யப்படும், பொருள்கள் கொள்முதல் குறித்து, தாமாக முன்வந்து எந்த ஆவணத்தையும் துறையின் Official Website-ல் பதிவேற்றம் செய்யாமலும் ஆவணங்களை அழிப்பது, ஊழலை மூடிமறைக்கும் செயலாகும்.

ஆவணங்களை அழித்தபின், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம், யார் எந்த ஆவணத்தைக் கோரினாலும், ஆவணங்கள் அளிக்கப்பட்டுவிட்டது எனக் கூறி, தகவல் தராமல் தப்பிப்பதற்கான சிறை உயரதிகாரிகளின் திட்டமே





Office of the Director General of Prisons and Correctional Services,
Chennai

No.TNPCS/4870/2025-ES-1 24-07-2025

**CIRCULAR**

Sub: Accumulation of old and time - barred files – Instructions for verification and destruction – Reg.

It has been observed during the recent visits of the Director General of Prisons and Correctional Services to various Central Prisons, District Jails, and Special Prisons for Women that a large number of old files have been allowed to accumulate in the office premises. Many of these files appear to be time-barred and no longer required for reference or future use.

2) It is also noticed that such obsolete records have not been weeded out and

இது. இனிமேல், பழைய/பின் தேதியிட்டு சிறை IG-யிடம் கையெழுத்து பெற்று, இந்த ஆவணங்களை அழிக்க உத்தரவுபெறுவதுகூட நடக்கும். இவையனைத்தும் சிறைத்துறை நிர்வாகத்தில் எந்த வெளிப்படைத்தன்மையும் இல்லாமல், ஊழல் தொடர்வதற்கே வழிவகுக்கும்.


முன்னாள் சிறைவாசி ஒருவர் நமக்கு அனுப்பிய கடிதத்தில், கைதிகளின் உரிமைகள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். பாலியல் சார்ந்த உளவியல் பிரச்சனைகளில் சிறைவாசிகள் சிக்கித்தவிப்பதும்கூட, ஊழலின் இன்னொரு கோரமுகம்தான் எனக் குறிப்பிட்டிருந்தார்.

சிறையில் அடைபட்டுள்ள கைதிகள் தேர்தலில் வாக்களிக்க முடியுமா? மக்கள் சிவில் உரிமைகள் சங்கம் (PUCL) Vs - இந்திய ஒன்றியம் வழக்கு, 2003: வாக்குரிமை என்பது இந்திய அரசியலமைப்பின் பிரிவு 326-ன் கீழ் ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு உரிமை எனவும், அடிப்படை உரிமை அல்ல என்பதையும் இந்திய உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், வாக்களித்து ஒருவரைத் தேர்வுசெய்யும் உரிமையானது, அரசியலமைப்பின் பிரிவு 19 (1) (a)-ன் கீழ் கருத்துச் சுதந்திரத்தின் ஒரு பகுதி எனக் கூறியுள்ளது.

கைதிகளின் வாக்குரிமை பறிப்புக்கான வரலாற்று பின்னணி இது-

**ஆங்கிலேயப் பறிமுதல் சட்டம், 1870 (British Forfeiture Act of 1870):** தேசத் துரோகம் அல்லது வேறு எதேனும் கடுமையான குற்றங்களுக்காகத் தண்டனை பெறும் கைதிகளின் வாக்குரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளும், இச்சட்டத்தின்படி அரசால் பறிக்கப்படும்.

**இந்திய அரசுச் சட்டம், 1935:** நாடு கடத்தப்படும் தண்டனை அல்லது வேறு ஏதேனும் சிறைத் தண்டனை பெறும் கைதிகள், தேர்தலில் வாக்களிக்கத் தடை செய்யப்பட்டனர். இவற்றை



அமெரிக்க போராட்டத்தில்...

பின்பற்றியே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்,1951, கைதிகளுக்கு தேர்தல் வாக்குரிமையை மறுக்கிறது.

**உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள்:** அனுகுல் சந்திர பிரதான் Vs - இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் வழக்கு, 1997 : இந்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் கைதிகளுக்கு வாக்குரிமை கோரும் மனுவை நிராகரித்த அதேவேளையில், அதற்கான சில காரணங்களையும் முன்வைத்தது.

(i) கைதிகளை வாக்களிக்க அனுமதிப்பதற்கு அதிக அளவில் காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்படும்.

(ii) தனது கெட்ட நடத்தையின் விளைவாக சிறையில் இருக்கும் ஒருவர், வெளியிலிருக்கும் நபருக்குச் சமமான சுதந்திரத்தைக் கோர முடியாது.

(iii) குற்றப்பின்னணி கொண்டவர்களைத் தேர்தல் களத்திலிருந்து விலக்கி வைக்கவேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளது.

ஏப்ரல் 2019-ல், டில்லி சட்டக் கல்லூரி மாணவர்களான பிரவீன் குமார் சவுத்ரி, அதுல் குமார் துபே மற்றும் பிரேர்ணா சிங் ஆகியோர் தங்களது மனுவில், கைதிகள் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 62(5) தடை செய்வது, அரசியலமைப்பு உரிமையை அவமதிப்பதால், இச்சட்டப் பிரிவை திருத்தவேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்கு (PIL) தாக்கல் செய்தபோது வாதிட்டனர். இவ்வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

**சட்ட முரண்:** மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 62(5)-ன்படி, சிறையிலிருக்கும் தண்டனைக் கைதிகளுக்கும், விசாரணைக் கைதிகளுக்கும் வாக்குரிமை கிடையாது. ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காகவும், குண்டர் சட்டத்திலும், சிறையில் அடைக்கப்பட்டவர்களும் தபால் வாக்குகள் மட்டும் அளிக்கலாம். ஆனால், பெரும்பாலான சிறைகளில் இதைப் பின்பற்றுவதில்லை.

அதேநேரத்தில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்,1951, பிரிவு 8-ன் கீழ், ஒரு நபர் தனது குற்றச் செயலுக்குத்

## கடந்து போவது எதுவும் கற்றுத் தராமல் போகாது!

தண்டனை பெற்றால் மட்டுமே தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் ஆகிறார். குற்றம் சாட்டப்பட்டவுடன் அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழப்பதில்லை.

சிறைவாசம் ஒருவரது குடியுரிமையைப் பறிக்கவில்லை என்றால், அது ஏன் வாக்குரிமையைப் பறிக்க வேண்டும்? குற்றம் சாட்டப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடலாம், ஆனால் அவர்கள் வாக்களிக்க முடியாதா? இது சட்ட முரண் அல்லவா?

ஏப்ரல் 2018ல் வெளியிடப்பட்ட ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ADR) பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள் (இதில் 776 எம்.பி.க்களில் 768 பேரும், 4,120 எம்.எல்.ஏ.க்களில் 4,077 பேரும் அடங்குவர்) தேர்தலின்போது சமர்ப்பித்த பிரமாணப் பத்திரங்களைப் பகுப்பாய்வு செய்து அளித்துள்ள அறிக்கையின்படி, எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களில் மொத்தம் 1580 பேர், அதாவது சுமார் 33 சதவீதத்தினர், தங்கள் மீது குற்றவியல் வழக்குகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

சமூக ஆர்வலர்களோ, கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமையை மறுப்பது பாரபட்சமானது என்றும், அரசியலமைப்பின் சமத்துவக் கொள்கையை (பிரிவு 14) மீறுவதாகவும் வாதிடுகின்றனர்.

கடந்த 2018-ல், அமெரிக்காவில் அமெரிக்கக் கைதிகளால் நாடு தழுவிய வேலைநிறுத்தம் செய்யப்பட்டது. அவர்களது கோரிக்கைகளில் ஒன்று, கைதிகளுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதாகும் (IWOC 2018). கைதிகளில் ஒருவரான பில்கிங்டன் “நான் அரசுக்கு வரி செலுத்துகிறேன், எனது வரி மட்டும் வேண்டும், ஆனால் நான் வாக்களிக்க முடியாதா? சிறைக் கைதிகளிடமிருந்து வரி வாங்க வேண்டாம் எனச் சட்டம் போடவேண்டியது தானே?” எனக் கூறியுள்ளது குறிப்பிடத் தக்கது.

**(ஊழல் தொடர்ந்து கசியும்)**

-ராம்கி

www.nakkheeran.in

# பாலியல் புகாரில் கேரள காங்கிரஸ் எம்.எல்.ஏ.!

## வரிந்துகட்டும் கம்யூனிஸ்ட், பா.ஜ.க.!

கேரளாவில் அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்ற தீவிரத்தில் மா.கம்யூனிஸ்ட்டுக்கு எதிராக களத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏ. மீது பல இளம்பெண்கள் பாலியல் குற்றச்சாட்டுகள் கூறியிருப்பது அக்கட்சியினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

கேரள சட்டமன்றத்தில் மிகவும் வயதுகுறைந்த 32 வயதான காங்கிரஸ் எம்.எல்.ஏ. ராகுல் மாங்கூடத்தில். 2024 அக்டோபரில் நடந்த இடைத்தேர்தலில் பாலக்காடு தொகுதியில் பா.ஜ.க. கிருஷ்ணகுமாரை தோற்கடித்து எம்.எல்.ஏ. ஆனார். ஏற்கனவே அந்தத் தொகுதியில் எம்.எல்.ஏ.வாக இருந்த மாநில இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஷாஜி பறம்பில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடகரை எம்.பி.யாக வெற்றி பெற்றதையடுத்து, கட்சியானது ராகுல் மாங்கூடத்திற்கு இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவியைக் கொடுத்ததோடு, இடைத்தேர்தலிலும் நிற்கவைத்து எம்.எல்.ஏ. ஆக்கியது.

காங்கிரசில் அடூர் வட்டாரச் செயலாளராக இருந்து பின்னர் காங்கிரஸ் மாநில செயலாளர், மாநில பொ.செ, இளைஞர்



ரினி ஜார்ஜ்



அவந்திகா



ராகுல் மாங்கூடத்தில்

காங்கிரஸ் பொ.செ., இளைஞர் காங்கிரஸ் மாநில தலைவர், எம்.எல்.ஏ. என உச்சத்துக்குவந்த ராகுல் மாங்கூடத்தில் ஒரு நல்ல பேச்சாளர். தொலைக்காட்சிகளில் தினமும் நேரடி விவாதங்களில் கலந்துகொள்பவர். இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த இளைஞர்களும் இளம்பெண்களும் தங்களுடைய வாட்ஸ்ஆப் புரொபைலில் இவருடைய போட்டோவைத்தான் வைத்துள்ளனர். அந்தளவு இளைஞர் காங்கிரசில் செல்வாக்காக இருந்துவருகிறார்.

காங்கிரஸ் அனுதாபியான நடிகை ரினி ஜார்ஜை, வயநாடு எம்.பி. ஆன பிரியங்காவிடம் அறிமுகம்செய்து கட்சியில் பொறுப்பு வாங்கித் தருவதாகவும், அடுத்தது கேரளாவில் காங்கிரஸ் ஆட்சிதான் அப்போது நான் மந்திரியாகிவிடுவேன் என சொல்லி ஓட்டலுக்கு வா என அழைத்து தொடர்ந்து, வாட்ஸ்அப் மெசேஜ் செய்து பாலியல்ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார் எனவும் புகார் எழுந்துள்ளது.

எழுத்தாளர் ஹனி பாஸ்கரையும் இதேபோல் டெலகிராமில் தொடர்ந்து ஆபாச சாட்டிங் தொந்தரவு செய்துவந்துள்ளார். கல்லூரித் தோழியான ரம்யா வசுதேவுடன் நெருங்கிப் பழகி அவரை கர்ப்பமாக்கியதோடு வயிற்றில் இருக்கும் குழந்தையைக் கலைக்க வற்புறுத்தியுள்ளார்.

நீ கர்ப்பமாவதற்கு நான் மட்டும் காரணம் இல்லையே. நீயும்தானே காரணம். அப்படியிருக்கும்போது நீ குழந்தையைக் கலைக்கவில்லை என்றால் அதற்கு அப்பா என்று யாரை காட்டிக் கொடுப்பாய் என்றதும், உன்னைத்தான் என ரம்யா வாசுதேவ் கூறியதாகவும், இப்படி பக்கம் பக்கமாக வாட்ஸ்அப் சாட்டிங்கை ரம்யா வாசுதேவ் வைத்துள்ளார் எனவும் சொல்லப்படுகிறது. திருநங்கை அவந்திகாவை வீடியா காலில் அழைத்து நிர்வாண நிலையில் அவளின் அழகைக் காட்டச் சொல்லி தொடர்ந்து துன்புறுத்திவந்துள்ளார். இதேபோல் நியூஸ் ரீடர் மாயாஸ்ரீயை பெங்களூர், ஹைதராபாத்தில் ஸ்டார் ஓட்டலில் அறை எடுத்து ஜாலியாக இருக்கலாம் என வாட்ஸ்அப் மெசேஜ் செய்து தொடர்ந்து பாலியல்ரீதியாக தொந்தரவு செய்துவந்துள்ளாராம்.

ராகுல் மாங்கூடத்திலால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த 5 பெண்கள் மட்டுமல்ல. இன்னும் 10-க்கு மேற்பட்ட மலையாள தொலைக்காட்சி நிறுவனங்களில் வேலைசெய்யும் இளம்பெண்களும் இருக்கிறார்கள். டி.வி.யில் நேரடி விவாதங்களில் கலந்துகொள்ளும் ராகுல் அங்கு செய்திப் பிரிவிலும் டெக்னிக்கல் மற்றும் நிருபர்களாக பணிபுரியும் இளம்பெண்களிடம் செல்நம்பரை வாங்கிக்கொண்டு அடிக்கடி பேசி தன்வசப்படுத்தி தொந்தரவு கொடுத்து வந்துள்ளாராம்.


கோவிந்தன்

இதில் முக்கிய டி.வி. சானல் ஒன்றில் நியூஸ் எடிட்டராக இருந்த பெண் ஒருவரை டெல்லிக்கு அழைத்துச் சென்று அங்கு ஒரு ஸ்டார் ஓட்டலில் வைத்து தன் ஆசையை தீர்த்துக்கொண்டாராம். இதனால் ஏற்பட்ட பஞ்சாயத்தை அந்த டி.வி. சானலின் பங்குதாரர் ஒருவர் மூலம் தீர்த்தாராம்.


ஸ்ரீகண்டன்

தற்போது 5 பெண்களுக்கு நடந்த கொடுமைதான் வெளிவந்துள்ளது. இளைஞர் காங்கிரசை சேர்ந்த ஏராளமான இளம்பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ரம்யா வசுதேவ் கர்ப்பத்தைக் கலைக்கச்சொன்னது கொலை செய்வதற்கு சமம் என்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி குழந்தைகள் நல பாதுகாப்பு கமிஷனர் கே.வி.மனோஜ்குமாரிடம் புகார் கொடுத்த வழக்கறிஞர் ஜிண்டோ ஜோசப் கூறினார்.


வழக்கறிஞர் சுரேஷ்

இந்நிலையில் பாதிக்கப்பட்ட அந்த 5 பேரும் போலீசில் புகார் கொடுக்காத நிலையில் நடிகை ரினிஜார்ஜூம் கல்லூரித் தோழி ரம்யா வசுதேவும் ஆரம்பத்தில் மீடியா நபர்களிடம் ராகுல் பெயரைக் குறிப்பிடாமல் காங்கிரஸ் பிரமுகர் என்றே குறிப்பிட... அது ராகுல்தான் என்று

## இன்றைய நிலையை வைத்து எதையும் தீர்மானித்துவிடாதீர்கள்... காலமும், நேரமும் எப்போது வேண்டுமானாலும் மாறலாம்!

எளிதில் புரிந்துகொண்டன கட்சிகள். ராகுல் மாங்கூடத்தில் பெயரைக் குறிப்பிட்டே போலீஸ் அவர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டது பா.ஜ.க.

இதையடுத்து 22-ம் தேதி ராகுல் மாங்கூடத்தில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். இந்த நிலையில் மா.கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கோவிந்தன், “அணை உடைந்து தண்ணீர் பாய்வதுபோல் ராகுல் மாங்கூடத்தில் மீது புகார்கள் பாய்ந்து வருகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தைரியமாக போலீசில் புகார் கொடுக்க முன்வர வேண்டும். அதேநேரத்தில் ராகுல் மாங்கூடத்தில் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யவேண்டுமா? என்று முடிவெடுக்க வேண்டியது காங்கிரஸ்தான், கம்யூனிஸ்ட் அல்ல” என்றார்.

பாலக்காடு காங்கிரஸ் எம்.பி. ஸ்ரீகண்டன் கூறும்போது, ‘‘தற்போது மா.கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ.வாக இருக்கும் நடிகர் முகேஷ், அதேபோல் தற்போது வனத்துறை மந்திரியாக இருக்கும் மா.கம்யூனிஸ்ட் கூட்டணி கட்சியான காங்கிரஸ் சோஷலிஸ்ட் தலைவர் சசீந்திரன் இருவர் மீதும் இதேபோன்று இளம் பெண்களுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த புகார்கள் உள்ளன. ஆனால் அவர்களின் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய சொல்லவில்லை கம்யூனிஸ்ட் கட்சி. பதவியை ராஜினாமா செய்தபிறகு நீதிமன்றமோ காவல்துறையோ விசாரணையின்போது அவர்கள் மீது குற்றம் நிருபிக்கப்படவில்லை என்றால் போன எம்.எல்.ஏ. பதவி திரும்பக் கிடைக்குமா?” என்றார்.

**திண்டுக்கல் புத்தகத் திருவிழா - 2025**
நாள்: 28-08-2025 முதல் 07-09-2025 வரை
இடம்: அங்குவிலாஸ் மேனிலைப் பள்ளி மைதானம், புறவழிச்சாலை, திண்டுக்கல்.
**நக்கீரன் ஸ்டால் எண்: 49**



பா.ஜ.க. மாநிலச் செயலாளர் வழக்கறிஞர் சுரேஷ் கூறும்போது, ‘‘ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சியில் கோவளம் காங்கிரஸ் எம்.எல்.ஏ. வின்சென்ட், கேரளா காங்கிரஸ் எம்.எல்.ஏ. பி.ஜே. ஜோசப் இருவர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள் இருந்தும் அவர்கள் எம்.எல்.ஏ. ஆக 5 ஆண்டுகள் நீடிக்கத்தான் செய்தார்கள். தற்போது கம்யூனிஸ்ட் ஆட்சியில் முகேஷ் எம்.எல்.ஏ., மந்திரி சசீந்திரன் இருவர் மீதும் இதேபோன்று பாலியல் குற்றச்சாட்டுகள் இருந்தும் அவர்கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யவில்லை. இந்த விசயத்தில் காங்கிரசுக்கும் கம்யூனிஸ்ட்டுக்கும் ஒற்றுமை உண்டு. அதனால்தான் ராகுல் மாங்கூடத்தில் மீது நடவடிக்கை எடுக்க கம்யூனிஸ்ட் தயங்குகிறது” என்றார்.

இந்த நிலையில் ராகுல் மாங்கூடத்தில் ஆதரவாளர்களோ, ராகுல் மாங்கூடத்தில் டெல்லி செயின்ட் ஸ்டீபன் கல்லூரியில் அரசியல் வரலாறு முதுநிலை பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருக்கும் போது அங்கு படித்த கேரளாவைச் சேர்ந்த ரம்யா வசுதேவும் நண்பர்களாகப் பழகிவந்தனர். அந்த உறவு கல்லூரிப் படிப்போடு முடிந்துவிட்டது. அதன்பிறகு ராகுல் மாங்கூடத்தில் அரசியலில் உச்சத்துக்கு வந்ததோடு, கேரளாவில் பரபரப்பாக பேசப்படும் இளம் தலைவராக மாறினார். இவர் செல்லும் இடங்களில் எல்லாம் இளம்பெண்கள் அவருடன் செல்பி எடுக்க முண்டியடித்தனர்.

இந்த நிலையில்... ‘கம்யூனிஸ்ட் திட்டத்தின்படி ரம்யா வசுதேவ் உட்பட 5 பேர் அவர் மீது தவறான குற்றச்சாட்டுகளை கூறுகிறார்கள். இதில் எந்த உண்மையும் இல்லை. இருந்தும் காங்கிரஸ் தலைமை கேட்டுக்கொள்ளாமலே இளைஞர் காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். கேரளாவில் ஆளும் கம்யூனிஸ்ட் மந்திரிகளை அரைகுறை ஆடைகளுடன் நின்று கட்டிப்பிடித்து போஸ் கொடுக்கிற கூட்டம்தான் ராகுல் மாங்கூடத்தில் மீது பொய்யான புகாரை கொடுத்திருக்கிறார்கள். புகார் கொடுத்தவர்களின் அரசியல் பின்புலத்தை விசாரித்தால் உண்மை தெரியும்’ என்கிறார்கள்.

இந்நிலையில் 25ஆம் தேதி ராகுல் மாங்கூடத்திலை கட்சியிலிருந்து அதிரடியாக நீக்கி உத்தரவிட்டது காங்கிரஸ் கட்சி.

கேரளாவில் இன்னும் 8 மாதத்தில் சட்டமன்றத் தேர்தல் நடக்கவிருக்கும் நிலையில் கம்யூனிஸ்ட்டும் பா.ஜ.க.வும் காங்கிரசுக்கு எதிராகக் கொளுத்திப் போட்டிருக்கும் இந்தத் தீ தற்போது பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

**-மணிகண்டன்**

www.nakkheeran.in

த.மு.மு.க.வின் 31ஆம் ஆண்டு துவக்க நாள் விழா, கடந்த ஆகஸ்ட் 25ஆம் தேதி, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட த.மு.மு.க. சார்பில் தாம்பரத்தில் கொடியேற்றும் நிகழ்ச்சி, மருத்துவ முகாம், ரத்ததான முகாம், உணவு வழங்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் த.மு.மு.க. நிர்வாகக்குழு உறுப்பினர் அனிபா, த.மு.மு.க. மாநில துணை பொதுச்செயலாளர் யாகூப் சிறப்பு அழைப்பாளர்களாக



எஸ்.ஆர்.ராஜா

# புறக்கணிக்கப்பட்ட தி.மு.க. எம்.எல்.ஏ.!

## –தாம்பரம் திகுதிகு!

அழைக்கப்பட்டிருந்தனர். கூட்டணிக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தி.மு.க. தரப்பில் தாம்பரம் மேயர் வசந்தகுமாரி, வி.சி.க. சார்பில் சாமுவேல், திராவிடர் கழகத்தை சேர்ந்த முத்தையா உள்ளிட்ட பல்வேறு கட்சிப் பிரமுகர்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்ட நிலையில், தி.மு.க.வின் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா தவிர்த்து, மற்ற அனைவரின் பெயர்களும் அழைப்பிதழில் அச்சிடப்பட்டிருந்தது, எம்.எல்.ஏ. தரப்புக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இதனால் கொதிப்படைந்த எஸ்.ஆர்.ராஜா, தி.மு.க.வினர் யாரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். இந்த விவகாரம் காஞ்சி மாவட்ட தி.மு.க. செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசனுக்கு தெரிவிக்கப்பட்டது. கூட்டணி தர்மத்தின்படி அனைவரும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்று அமைச்சர் தரப்பிலிருந்து தெரிவிக்கவே, தாம்பரம் மேயர், துணைமேயர் உள்ளிட்ட கட்சியினர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். இது, எம்.எல்.ஏ. தரப்பில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த பிரச்சனை தொடர்பாக, மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் தாம்பரம் யாகூப்பிடம் பேசினோம். “தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் சுமார் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். அதில் சுமார் 25 சதவீத சிறுபான்மையினரின் வாக்குகள் அத்தொகுதியின் வெற்றி, தோல்வியை தீர்மானிக்கின்றன.

கடந்த 25 ஆண்டுகளாக பட்டியல் சமூகத்தினர் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிராக தற்போதைய தாம்பரம் தி.மு.க. எம்.எல்.ஏ. எஸ்.ஆர்.ராஜா செயல்பட்டு வருகிறார். தாம்பரம் பஸ் நிலையம் மற்றும் சண்முகம் சாலை மார்க்கெட் பகுதியில் நடைபாதை வியாபாரிகளை அப்புறப்படுத்தியதால் சிறுபான்மையின மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டார்கள். இதனால் கடந்த 2011ஆம் ஆண்டு தேர்தலில் மனித நேய மக்கள் கட்சி, த.மு.மு.க., அ.தி.மு.க.வை ஆதரித்தன. அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் சின்னையா 35 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார். அந்த தேர்தலில் எஸ்.ஆர்.ராஜா தோல்வியடைந்தார்.



2016, 2021 தேர்தலில் தி.மு.க.வுடன் மனிதநேய மக்கள் கட்சி, த.மு.மு.க. கூட்டணி அமைத்ததால் எஸ்.ஆர்.ராஜா 40,000 வாக்குகள் அதிகம் பெற்று சிறுபான்மையினர் மற்றும் பட்டியலின மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவரோ, இந்துத்துவா அமைப்பினரின் பிள்ளையார் சதுர்த்தி உள்ளிட்ட விழாக்களில் கலந்துகொள்வது சிறுபான்மை மக்களுக்கு



தாம்பரம் யாகூப்

கோபத்தை ஏற்படுத்துகிறது. தொடர்ச்சியாக இதுபோல் செய்துவருவதில் சிலவற்றை குறிப்பிடுகிறேன். தாம்பரம் மாநகராட்சி அருகே செஞ்சிலுவை சங்கத்தின் கட்டடம், தாம்பரத்தில் செயல்படும் சென்னை கிறிஸ்தவ கல்லூரிக்கு சமூக மேம்பாட்டுக் கல்லூரி நடத்திக்கொள்ள லீசுக்கு வழங்கப்பட்டது. அந்த லீஸ் முடிவடையவும், எம்.எல்.ஏ.வின் ஆதரவாளரான தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவர் இந்திரனின் ஆட்கள், சமூக மேம்பாட்டுக்



விழாவில் கூட்டணிக் கட்சியினர்

கல்லூரிக்கு பூட்டு போட்டுவிட்டு, 5வது மண்டலக்குழு அலுவலகம் என்று போர்டு வைத்தனர். இதைப்பற்றி மாநகராட்சி கூட்டத்தில் நான் கேள்வியெழுப்பினேன். மேயர் வசந்த குமாரி, அதைப்பற்றி தெரியாதெனக் கூறினார். இதைக் கண்டித்து மனிதநேய மக்கள் கட்சி சார்பாக போராட்டம் நடத்திய அனைவர் மீதும் தடியடி நடத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தற்போது நீதிமன்றத்தில் இந்த இடம் தொடர்பாக வழக்கு நடந்து வருகிறது.

அதேபோல தாம்பரம் கஸ்தூரிபாய் நகரில், தாம்பரம் ஜமாத்துக்கு சொந்தமான மதரஸா நடத்தப்படுகிறது. அதனருகே செல்வகுமார் என்பவர் தனக்கு சொந்தமான இடமெனக்கூறி பிள்ளையார் சிலையை வைத்தார். போராட்டம் நடத்தியபின்பே சிலையை அப்புறப்படுத்தினர்.

இந்த விவகாரத்தின் பின்னணியில் எஸ்.ஆர்.ராஜா செயல்பட்டது சிறுபான்மை மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. மேலும், இவரின் தூண்டுதலின் பேரில், இந்த பகுதியில் பாங்கு ஓதுவதால் இந்து முஸ்லிம் பிரச்சினை ஏற்படுமென்று புகாரளிக்கப்பட்டது. இப்படிப்பட்ட இவர் பொதுக்கூட்டங்களில் பாய் பாய் என்று இஸ்லாமியர்களை அழைப்பது எங்களை இழிவுபடுத்துவதாகத் தோன்றுகிறது.

தாம்பரம் நேஷனல் பள்ளி, விஷ்வ இந்து பரிசத்தின் வசம் தற்போது உள்ளது. இது 1969ல் நாராயணராவ் என்பவரால் சிறிதாக ஆரம்பிக்கப்பட்டு, சேவை மனப்பான்மையில் செயல்பட்டு வந்தது. பின்னர், அ.தி.மு.க.வின் முனுஆதி சபாநாயகராக இருந்தபோது ஏழைக் குழந்தைகளின் கல்விக்காக இந்த இடம் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. சிறுபான்மையினருக்கு தி.மு.க. பாதுகாப்பு கேடயமாக இருப்பதால் தொடர்ந்து கூட்டணியில் இருந்துவருகிறோம். ஆனால் இவரோ தொடர்ச்சியாக சிறுபான்மையினர், பட்டியலினத்தோருக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். பட்டியலினத்தை சேர்ந்த தாம்பரம் மேயர் கடந்த சில வருடங்களாக இவரால் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார் என்பது இப்பகுதி மக்களுக்கு நல்லாவே தெரியும். இவரால் கூட்டணிக்கு சிக்கல் வருமெனத் தோன்றுகிறது" என்று முடித்துக்கொண்டார்.

**-அரவிந்த்**

## (78) துஷ்டி சொல்லுதல்!

துஷ்டி என்பது ஒரு சமஸ்கிருத சொல். இது தமிழ் மொழிக்கு எந்தக் காலத்தில் வந்தது என்பது யாருக்குமே தெரியவில்லை. சடங்குகள், சம்பிரதாயங்களுக்குள் மனிதரை அடைத்து வைத்து, அதற்குள் தீண்டாமையை வளர்ப்பதற்காகவே இந்த சொல் உருவாக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து தீண்டாமையை அகற்றுவதற்கு சடங்கு சம்பிரதாயங்களைத் தகர்ப்பது அவசியம் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.. இந்த சடங்குகளை அகற்றுவதில் கம்யூனிஸ்டுகள் உறுதி கொண்டிருந்தனர்.

அடக்குமுறை காலத்தில், அதன் நுட்பமான பகுதிகளை கம்யூனிஸ்டுகள் ஆராய்ந்து பார்த்தனர். தலைமறைவு காலங்களில் தாங்கள் தங்கியிருந்த தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் குடியிருப்புகளில், இந்த தீண்டாமையை வளர்ப்பதில், சடங்குகள் ஆழ்மனச் செயல்பாடாக அமைந்திருந்ததை இவர்கள் நன்கு உணர்ந்துகொண்டார்கள். இதில் நல்லகண்ணு கூடுதல் கவனம் செலுத்தி வந்தார். துஷ்டிக்கும் தீண்டாமைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை ஆராய்ந்து பார்த்தார்.




பேராசிரியர் ஆ. சிவசுப்ரமணியம் தமிழகத்தின் தனித்துவமான மார்க்சீய அறிஞர். தமிழ் சமூகத்தின் அடித்தள மக்களின் வரலாற்றை ஆய்வு செய்ததில், இவரது பங்களிப்பை அளவிட்டு சொல்லிவிட முடியாது. வாழ்நாளை இதற்காக அர்ப்பணித்துக் கொண்டவர். பேராசிரியர் நா. வானமாமலையின் மாணாக்கன் என்பதில் பெருமை கொள்பவர். துஷ்டி சொல்வது பற்றிய இவரது குறிப்புகள் ஆராய்ந்து பார்க்கத்தக்கதாக இருக்கிறது. இதை தென்மாவட்டங்களில் துட்டி சொல்வது என்பார்கள்.

பேராசிரியர் தனது வார்த்தைகளில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார். திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கிழக்குப் பகுதியில் ரெட்டியார் பட்டி, முனைஞ்சுப்பட்டி, மூலக்கரப்பட்டி, என்கிற ஊர்கள் உள்ளன. இந்த ஊர்களிலும், இதை சுற்றியுள்ள ஊர்களிலும் ரெட்டியார் சமூகத்தைச் சார்ந்தவர்கள் கூடுதலாக வசித்து வருகிறார்கள். ஐம்பதுகளின் தொடக்கம் வரை, இங்குள்ள பண்ணையார்களிடம் வேலை செய்த வந்த ஆதி திராவிடர்கள் துட்டி சொல்லுதல் என்னும் வேலையை செய்து வந்தனர்.

துட்டி சொல்லுதல் என்பது மேல்சாதிக்காரர்களின் வீட்டில் யாராவது இறந்து போனால், அவர்களின் உறவினருக்கு ஊர் ஊராகப் போய் கூனிக்குறுகி நின்று துக்க செய்தியை சொல்லுதல். இவ்வாறு சொல்ல வருபவர்களுக்கு நெல் அளந்துதரும் வழக்கமும் இருந்தது. இந்த வழக்கம் தங்களைத் தாங்களே அடிமைப்படுத்திக்கொள்ளும் மனநிலையை அவர்களுக்கு உருவாக்கியிருந்தது. இந்தப் பழக்கத்தை மாற்றுவது என்று கம்யூனிஸ்டுகள் முடிவு செய்தனர். இது அத்தனை சுலபமான வேலையில்லை என்பதையும் அவர்கள் மிக நன்றாகவே அறிந்திருந்தனர்.

இதில் வேறொன்றையும் பேராசிரியர் குறிப்பிடத் தவறவில்லை. இந்தப் பகுதியில் பிழைப்புக்காக பம்பாய் சென்று திரும்பி வந்தவர்களும் இருந்தார்கள். இவர்கள் அம்பேத்கர் விடுதலை சிந்தனையை ஓரளவிற்கு அறிந்திருந்தார்கள். அவர்களில் சிலர், முதலில் ஒரு துஷ்டி சொல்வதற்கு

**ஒருவரை ஏமாற்றி கிடைக்கும் சந்தோஷம்**
**நீண்ட நேரம் நிலைத்திருக்கப் போவதில்லை!**

மறுப்பு தெரிவித்தனர். மறுப்பு சொல்பவர்களை ஒதுக்கி வைத்துவிட்டு மற்றவர்களை பயன்படுத்திக்கொள்ளும் தந்திரத்தை பின்பற்றினர் நிலப்பிரபுகள். இவை எல்லாவற்றையும் மிகவும் நன்றாகவே அறிந்து வைத்திருந்தார் நல்லகண்ணு. அவருக்குள் ஒரு திட்டம் உருவானது.

இதில் உருவான எதிர்ப்புகள் அனைத்தை யும் ஒருங்கிணைத்தார். இதைத் தீண்டாமை ஒழிப்பின் குறியீடாக்கினார். கடின முயற்சிக்குப் பின்னர் இதில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இந்த பகுதிகளில் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கிவைக்கப்பட்ட மக்களிடம் இது குறித்து தொடர்ந்து விவசாய சங்கம் பிரச்சாரம் செய்து வந்தது.

அப்பொழுதுதான் அந்த தீவிரம் நிகழ்ந்தது. அந்த தீவிரத்திற்கான அடிப்படை, சமூகங்களின் ஒற்றுமை. அடித்தள மக்கள் ஒரு சிறந்த ஜனநாயகமுறையை தங்களுக்குள் செயல்படுத்தி வந்தனர். அது கூட்டாகக் கூடி, தங்களுக்குள் முடிவெடுத்துக் கொள்ளும் முறை. இந்த முறை தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒருவிதமாக இருந்தது.

தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த எளிய மக்களின் குடியிருப்புகள்தோறும், இந்த கூட்டங்கள் நடந்தன. இதனை விளக்கி, தீண்டாமையை எவ்வாறு இவ்வாறான வழக்கத்தின் மூலமாக பாதுகாத்து வருகிறார்கள் என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்தக் கூட்டங்களில் ஒரு தீவிரமான முடிவும் எடுக்கப்பட்டது. அந்த முடிவு சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாது மற்ற சமூகத்தினருக்கும் அதிரச்சியை அளித்தது. துஷ்டி சொல்வதை ஏற்று செயல்படுவர்களோடு, அந்த சமூகத்தின் இதர பகுதியினர், மண உறவு எதுவுமே வைத்துக் கொள்ளக்கூடாது என்பதுதான் அந்த முடிவு.

ஆரம்பத்தில் சில எதிர்ப்புகள் இருந்தன. பெரும்பாலான கிராமங்களில் இதற்கு பொதுவான இணக்கமும் வந்திருந்தது. இதற்கு காலமாறுதல் காரணம். சுதந்திரத்திற்குப் பிந்திய காலங்களில் மேல்சாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொண்ட ஒரு பகுதியினரிடம் முற்போக்கு எண்ணங்கள் உருவாகியிருந்தன. இந்த வழக்கங்கள் கால வளர்ச்சியில் தேவையில்லை என்ற நிலைக்கு. இவர்களும் வந்திருந்தார்கள். இந்த



பேராசிரியர்
ஆ.சிவசுப்ரமணியம்

-சி.மகேந்திரன்

## பலநூறு வலிகள் கண்டவனுக்குத்தான் புரியும்... அமைதிதான் தனக்கு சரியான ஆறுதல் என்று!


Vol.38
Issue No:39
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்:** மாவலி
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :** க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன், எம்.செந்தில்குமார், தா.மகாராஜன், சி.பிரான்சிஸ், பி.என்.ஆனந்த்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:**
ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** பிரின்ஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**சந்தா பிரிவு உதவியாளர்:** பார்த்திபன்
**முதன்மை காசாளர் :** நித்தியானந்தன்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் :** து.கண்ணன்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனூஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**
**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**



சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.


பகுதிகளில் துஷ்டி சொல்லுவதை நிறுத்த முடிந்தது.

எல்லா நேரங்களிலும் சில ஆதிக்க சாதிக்காரர்கள்தான் பிரச்சினை. தங்கள் அதிகாரத்தை விட்டுக்கொடுக்க முடியாது என்ற திமிர் அவர்களை வெகுவாக ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிடுகிறது. அப்படிப்பட்ட ஒரு அரசியல்வாதி இருந்தார். அவர், தனது வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டார். இதைப் பற்றிய விபரங்களையும் பேராசிரியர் சிவசுப்ரமணியம் தன் குறிப்புகளில் தெரிவித்துள்ளார். அந்த அரசியல்வாதியை எதிர்த்து, கம்யூனிஸ்டு கட்சியும் விவசாயிகள் சங்கமும் ஒரு தொடர் போராட்டத்தை நடத்தியது. அந்த ஆதிக்கக்காரர் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட அந்தக் குடும்படுத்தைக் காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து மிரட்டி அச்சுறுத்தத் தொடங்கிவிட்டார்.

தோழர் நல்லகண்ணுவுக்கு கடுங்கோபம் வந்துவிட்டது. இவரே நேராக காவல் நிலையத்திற்கு சென்றுவிட்டார். தோழர்கள் கூட்டம் அருகில் இருக்க, காவல்துறை அதிகாரியிடம் தன் பேச்சுவார்த்தையை தொடங்கினார். எதிலும் நடைமுறை வாழ்க்கையிலிருந்து உதாரணங்களை எடுத்துச்சொல்வதில் இவர் கெட்டிக்காரர். இந்த அணுகுமுறை, இவரின் வாழ்நாள் வெற்றி என்று கூறமுடியும்.

காவல்துறை அதிகாரி அந்த அரசியல்வாதியான பண்ணையார் என்ன சொன்னாரோ அதை அப்படியே நல்லகண்ணுவிடம் திரும்பவும் சொன்னார். அவரிடம் அமைந்த அதிகாரத் திமிர், மற்றவர்களை அலட்சியப்படுத்தும் வெளிப்பாடுகளைக் கொண்டிருந்தது. இதை தோழர் நல்லகண்ணு பொருட்படுத்திக் கொள்ளவில்லை. காவல்துறை அதிகாரி கேட்ட கேள்வி இதுதான். அவரவர் குடிதொழிலை அவரவர் செய்ய வேண்டும் என்பது கிராமத்தின் விதிமுறை. இதை எப்படி நிறுத்துவது என்று எதிர்க்கேள்வி கேட்டார். சாதாரண விவசாயியைப் போன்ற தோற்றம் கொண்ட நல்லகண்ணுவிடம் இப்படிப்பட்ட ஒரு பதில் வரும் என்று அந்த அதிகாரி எதிர்பார்க்கவில்லை. செய்யும் தொழிலைத்தான் பரம்பரையாக செய்யவேண்டும் என்றால், உங்கள் தாத்தா போலீசா... உங்கள் அப்பா போலீசா? நீங்கள் ஏன் இந்தத் தொழிலை செய்றீர்கள்? என்றார். அவரால் பதில் பேச முடியவில்லை. அதற்குமேல் இந்தப் பிரச்சினையை ஒரு சட்டபூர்வமான பிரச்சினையாக மாற்றினார். துட்டி சொல்ல மறுத்தால் சமந்தப்பட்டவர் மீது வழக்குத் தொடரப் படுகிறது என்று நீங்கள் fir பதிவு செய்யுங்கள் என்றார். இதன் பின்னர் அங்கு துட்டி சொல்லுவது நிறுத்தப்பட்டது. இதைப்போன்ற சடங்குகள் எதிர் போராட்டத்தில் ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் வாழ்க்கையில் நெருப்புப்பொறி ஒன்று விழுந்து தீப்பிடிக்கத் தொடங்கிவிட்டது.

**(தொடரும்)**


www.nakkheeran.in




காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்த முதல்வர் -உடன் பஞ்சாப் முதல்வர் பகவந்த்மான்

# குழந்தைகளின் வயிறும் மனசும் நிறைஞ்சிருக்கு!

## –முதல்வர் ஸ்டாலின் உற்சாகம்!

ஏழைகளின் ஏக்கத்தைப் போக்கிட அரசு பள்ளிகளில் தி.மு.க. அரசு செயல்படுத்திவரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நகர்ப்புறங்களிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த விரிவாக்கத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலினும், பஞ்சாப் முதல்வர் பகவந்த்மானும் தொடங்கி வைத்துள்ளனர்.

தமிழகத்தில் சமூக நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார் முதல்வர் ஸ்டாலின். அந்த வகையில், காலை உணவு இல்லாததால் தமிழக ஏழைத் தாய்மார்கள் பலர் தங்களின் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதே இல்லை. இதனை உணர்ந்த ஸ்டாலின், காலை உணவுத்திட்டத்தை கொண்டு வந்தார்.

அதன்படி, இந்தியாவிலேயே முதன்முறையாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கடந்த 2022, செப்டம்பர் 15-ந்தேதி மதுரையில் துவக்கி வைத்தார் ஸ்டாலின். முதல்கட்டமாக 38 மாவட்டங்களிலுள்ள 1,545 அரசு தொடக்கப்பள்ளிகளில் இந்த திட்டம் நடைமுறைக்கு வந்தது. இதன்மூலம், 1 லட்சத்து 14 ஆயிரம் மாணவ-மாணவிகள் பயனடைந்தனர். அவர்களின் வயிறும் மனசும் நிறைந்தது. இதனையடுத்து இந்தத் திட்டம் 4 முறை விரிவாக்கம் செய்யப்பட்டது. அந்த வகையில் தமிழகத்தில் கிராமப்பகுதிகளில் இருக்கும் அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் 34,987 தொடக்கநிலை பள்ளிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், தற்போது வரை 20 லட்சத்து 53 ஆயிரம் மாணவ-மாணவிகள் முதலமைச்சரின் சத்தான காலை உணவுத் திட்டத்தில் பயன்பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், கிராமப்புறங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தை நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கம் செய்ய விரும்பினார் முதல்வர் ஸ்டாலின். இது குறித்து அரசின் தலைமைச்செயலாளர் முருகானந்தம், நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன், முதல்வரின் செயலாளர்கள், அரசின் செய்தி தொடர்பாளர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகளிடம் விரிவாக ஆலோசனை நடத்தினார். நிதி நிலைமை ஆராயப்பட்டது.

www.nakkheeran.in

இலங்கை முன்னாள் அதிபர் ரணில் விக்ரமசிங்கேவிற்கு ஜாமீன் வழங்கியது கோர்ட்டு


காலை உணவுத் திட்ட விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

நகர்ப்புறங்களில் விரிவாக்கம் செய்ய எவ்வளவு நிதிச்சுமை ஏற்படும் என்பதையும் கேட்டறிந்தார் ஸ்டாலின்.

நகர்ப்புறங்களிலும் காலை உணவுத்திட்டம் நடைமுறைக்கு வரவேண்டும்; எவ்வளவு நிதிச்சுமை ஏற்பட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம்; திட்டத்தை கொண்டு வருவதற்கான வழிகளை ஆராயுங்கள் என்று உயரதிகாரிகளை கேட்டுக் கொண்டார் ஸ்டாலின். இதனையடுத்து, பல்வேறு கட்ட ஆலோசனைகள் நடந்தன. முதல்கட்டமாக நகர்ப்புறங்களிலுள்ள அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளுக்குத் திட்டத்தை விரிவாக்கம் செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டு முதல்வரிடம் தெரிவிக்கப்பட்டது. அவரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன், திட்டத்தின் துவக்க விழாவுக்கு, தமிழகம் போலவே சமூக நலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் தரும் பஞ்சாப் மாநில முதல்வர் பகவந்த்மானை அழைக்கலாம் எனவும் தெரிவித்திருக்கிறார்.

அதன்படி, முதல்வர் பகவந்த்மானின் கவனத்துக்கு இதனை எடுத்துச்சென்றது தி.மு.க. அரசு. தொடக்க விழாவில் கலந்துகொள்ள முதல்வர் பகவந்த்மான் சம்மதித்தார். விழாவுக்கான அழைப்பிதழ் தயாரானதும், அதனை முறைப்படி பகவந்த் மானுக்கு வழங்க தி.மு.க. எம்.பி. வழக்கறிஞர் வில்சனை அனுப்பி வைத்தார் முதல்வர் ஸ்டாலின். இதனையடுத்து தொடக்கவிழாவுக்காக சென்னை வந்த பகவந்த்மானுக்கு கனிமொழி எம்.பி. தலைமையில் சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

அந்த வகையில், ஐந்தாம் கட்டமாக, நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் தொடங்கப் பள்ளிகளில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தொடக்க விழா, கடந்த 26-ந்தேதி சென்னை மயிலாப்பூரில் இருக்கும் புனித சூசையப்பர் பள்ளியில் நடந்தது. முதல்வர்கள் ஸ்டாலினும், பகவந்த் மானும் திட்டத்தைத் தொடங்கி வைத்தனர். இருவரும் இணைந்து பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவை பரிமாறினர்.

விழாவில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள், பள்ளி மாணவ-மாணவிகள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். பள்ளிக்குழந்தைகளுடன் அமர்ந்த ஸ்டாலின், பகவந்த் மான், உதயநிதி ஆகியோர் காலை உணவை சாப்பிட்டனர். அப்போது, தங்களுக்கு அருகில் அமர்ந்திருந்த குழந்தைகளிடம் ஸ்டாலினும் உதயநிதியும் சகஜமாகப் பேசினார்கள். காலை உணவின் சுவை குறித்து குழந்தைகளிடம் கேட்டனர்.

விழாவில் பேசிய சிறப்பு விருந்தினர் முதல்வர் பகவந்த்மான், பஞ்சாப் -தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களுக்கான உறவுகளைச் சுட்டிக்காட்டியவர், காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட தி.மு.க. அரசு நிறைவேற்றிவரும் சமூகநலத் திட்டங்களையும், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்புகளுக்கான திட்டங்களையும் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர், "முதல்வரின் காலை உணவுத் திட்டத்தில் 20 லட்சம் குழந்தைகள் பயனடைவது பெருமையாக இருக்கிறது. இந்த திட்டத்தின் நோக்கம் உன்னதமானது. சமூகப் பிரச்சனைகளைக் கையாள்வதிலும், பொதுநலன்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு சிறந்து விளங்குகிறது. குழந்தைகளுக்கு ஆரோக்கியம் தருவது சத்தான காலை உணவு. அந்த உணவு இல்லாமல் பள்ளிக்கூடங்களுக்கு குழந்தைகளை பெற்றோர்கள் அனுப்புவதில்லை. இதனால் அவர்கள் கவலையடைந்துள்ளனர். பெற்றோர்களின் அந்த கவலைகளைப் போக்கியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

காலையில் சத்தான உணவு சாப்பிடுவதினால் பள்ளிக் குழந்தைகளின் கல்வி கற்றல் சூழல்

www.nakkheeran.in

அதிகரித்திருப்பது பாராட்டப்படவேண்டிய விசயம்! தமிழகத்தின் வளர்ச்சியை பார்க்கும்போது இதனையெல்லாம் உணரும்போது, தமிழ்நாட்டிற்கு உண்மையான ஒரு தலைவர் கிடைத்திருக்கிறார். ஒன்றிய அரசுக்கும் மற்ற மாநிலங்களுக்கும் முன் மாதிரி திட்டமாக இருக்கும் காலை உணவுத்திட்டத்தை பஞ்சாப் மாநிலத்திலும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் பகவந்த் மான்.

விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், பசியும், பிணியும், பகையும் இல்லாத நாடுதான் சிறந்த நாடாக பாராட்டப்படும் என வான்புகழ் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அவரின் வாக்குக்கு இலக்கணமாக இந்த நிகழ்ச்சி இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பேற்ற சமயத்தில், அசோக்நகர் மகளிர் பள்ளிக்கூடத்திற்கு சென்றிருந்தபோது, அங்கிருந்த மாணவிகளிடம் 'காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?' என கேட்டேன். 'டீ குடித்தேன்; பன் சாப்பிட்டேன்' என சொன்னார்கள். அப்போதுதான், காலை உணவுத் திட்டம் தேவை என்பதை உணர்ந்து அதனை கொள்கையாக அறிவித்தேன்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மூலம் 20 லட்சம் குழந்தைகள் சத்தான, சூடான, சுவையான காலை உணவை சாப்பிட்டுவிட்டு வகுப்புகளுக்கு தெம்பாகச் செல்கிறார்கள். அதனைப் பார்க்கும்போது மனநிறைவாக இருக்கிறது. இதைவிட வேறு என்னவேண்டும்?

இந்த திட்டத்திற்காக வருடத்திற்கு 600 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. இதைச் செலவு எனச் சொல்லக்கூடாது; செலவு என சொல்லவும் மாட்டேன். இது, எதிர்காலத்திற்கான சமூக முதலீடு என்பதாகவே பார்க்கிறேன். தமிழ்நாட்டின் மாணவ -மாணவிகளின் திறமை, அறிவு, ஆற்றல் மீது நம்பிக்கை வைத்து முதலீடு செய்திருக்கிறோம். நீங்கள் எல்லாம் நன்றாக படித்து, முன்னேறி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பணியாற்றினால் அதுதான் இந்த திட்டத்தின் உண்மையான வெற்றி. அந்த வெற்றியை நீங்கள் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சத்தான காலை உணவுத் திட்டத்தை கொண்டுவந்துள்ளோம்.

இந்த திட்டத்தின் மூலம், குழந்தைகளின் ஆரோக்கியம் அதிகரித்திருக்கிறது ; கற்றல் திறன் உயர்ந்துள்ளது; மருத்துவமனைக்கு குழந்தைகள் செல்வதும் தடுக்கப்பட்டிருக்கிறது; பள்ளிகளுக்கு குழந்தைகளின் வருகையும் கூடுதலாகியிருக்கிறது; ஊட்டச்சத்து குறைபாடு குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் நாம் நிறைவேற்றியுள்ள இந்த சத்தான காலை உணவுத் திட்டத்தை பிற மாநிலங்கள் மட்டுமல்ல, பிற நாடுகள் கூட நடைமுறைப் படுத்தவும், தொடங்கவும் ஆலோசனை நடத்தி வருகின்றனர். அந்தளவுக்கு முத்திரை பதிக்கும் திட்டமாக இருக்கிறது" என்றார் மிக மகிழ்ச்சியாக.

காலை உணவுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் நிறைவு பெறும் சூழலில், இத்திட்டத்தைப் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

திட்டத்தின் ஆய்வு முடிவுகள் குறித்து பேசிய தமிழக அரசின் செய்தி தொடர்பாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., "அந்த ஆய்வில் ஊரக நகர்ப்புற பகுதிகளைச் சேர்ந்த 100 பள்ளிகளும் 5,274 மாணவர்களும் பங்கேற்றனர். அந்த ஆய்வில், மாணவர்களின் வருகை சதவீதம் அதிகரித்திருக்கிறது, தாமதமாக பள்ளிகளுக்கு வருவதும் குறைந்துள்ளது, கற்றல் திறமை மற்றும் ஆரோக்கியம் கூடியிருக்கிறது.

மாணவர்கள் நோய்வாய்ப்படுவதும் மருத்துவ மனைகளில் அட்மிட்டாவதும் குறைந்துள்ளது, ஆசிரியரின் குறிப்புரைகளை பின்பற்றுவதும், எழுத்துப் பணிகளை அவ்வப்போது முடிப்பதும், கல்வி இணைச் செயல்பாடுகளில் ஆர்வமுடன் பங்கேற்பதும், விளையாட்டுகளில் கலந்துகொள்வதும் அதிகரித்துள்ளன, முந்தைய பாடங்களை நினைவுகூர்வது 80 சதவீதம் அதிகரித்துள்ளது உள்ளிட்ட முன்னேற்றங்கள் இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலும், சீக்கிரத்தில் வேலைகளுக்குச் செல்லும் கிராமப்புற குடும்பங்களுக்கு இந்த திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது" என்று சுட்டிக் காட்டினார்.


**-இரா.இளையசெல்வன்**



அமுதா ஐ.ஏ.எஸ்.

**(5-ம் பக்கத் தொடர்ச்சி)**

என்பதற்காகப் பல்வேறு சட்ட விதிகளை ரெரா உருவாக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இந்த ஆணையத்தின் உறுப்பினர் களாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 3 பேர் சமீபத்தில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் கட்டுமானங்கள் குறித்த அனுபவமும், கள அறிவும் இல்லாதவர்களாம். அப்படிப்பட்ட வர்களால் எப்படி பொது மக்களின் பிரச்ச னைகளைத் தீர்க்கமுடியும்? என்ற கேள்வியை சீனியர் அதிகாரிகள் கேட்கின்றனர்."



முதல்வர் ரங்கசாமி

"அதானே?"

"அதுமட்டும் இல்லைங்க தலைவரே, இந்த ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மூவரோடு, ஓய்வுபெற்ற சென்னை மாநக ராட்சி அதிகாரி ஒருவரும் உறுப்பினராக அந்த ஆணையத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது மனைவி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராக ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் -மனைவிக்கே அரசு பதவிகளைத் தூக்கிக் கொடுப்பதா? என்கிற குற்றச்சாட்டும் இப்போது கோட்டையிலேயே எழுந்திருக்கிறது. இது சீனியர் அதிகாரிகளை வெறுப்பேற்றவும் செய்திருக்கிறதாம்."

"தமிழக அமைச்சர் ஒருவரின் மகன், மாஜி பா.ஜ.க. மாநில நிர்வாகி கையால் பதக்கம் அணிவித்துக்கொள்ள மாட்டேன் என்று மறுத்திருக்கிறாரே?"

"ஆமாங்க தலைவரே, புதுக்கோட்டை மாவட்டம் ஆவரங் குடிப்பட்டி கிராமத்தில், தமிழ்நாடு துப்பாக்கி சுடும் சங்கம் மற்றும் புதுக்கோட்டை ராயல் ஸ்போர்ட்ஸ் கிளப் இணைந்து முன்னெ டுத்த 51ஆவது மாநில அளவிலான துப்பாக்கி சுடும் போட்டி 7 நாட்கள் நடந்தன. ஒவ்வொரு நாளும் அரசியல் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். அந்த வகையில் 25ஆம் தேதி பா.ஜ.க. மாஜி மாநிலத் தலைவர் வந்திருந்தார். அவர், வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களை அணிவித்தார். அப்போது, தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மகன் சூரியராஜபாலு, துப்பாக்கி சுடும் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றிருந்தார். அவருக்கும் பா.ஜ.க மாஜி மாநிலத் தலைவர், பதக்கத்தை அணிவிக்க முயன்றபோது, சூரியராஜபாலு சிரித்துக் கொண்டே, அந்தப் பதக்கத்தைக் கழுத்தில் போடவிடாமல் தடுத்து, கைகளில் வாங்கிக்கொண்டு படம் எடுத்துக்கொண்டார். இதனால் அந்த மாஜியின் முகம் இருண்டுபோனது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுகுறித்து கருத்து தெரிவித்த அந்த பா.ஜ.க. பிர முகர், 'அந்தத் தம்பி எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும். யார் கைல பதக்கம் வாங்கணும், யார் கைல வாங்கக் கூடாது என்பது, ஒவ் வொரு மனிதரின் தனிப்பட்ட உரிமை. அவர் இந்தத் துறையில் சாதனை பண்ணணும்' என்று சங்கடத்தோடு சொல்லிவிட்டுச் சென்றார்."

# விஜய்க்கு கை கொடுக்குமா தூத்துக்குடி? த.வெ.க.வை அதிர வைத்த ரிப்போர்ட்!



www.nakkheeran.in

## உ.பி.யைச் சேர்ந்த 5,000 பேர் பீகாரில் வாக்காளர்களாக சேர்ப்பு: காங்., ஆர்.ஜே.டி. எம்.பி.க்கள் குற்றச்சாட்டு

*"திண்டுக்கல் மாநகராட்சியில் ஏகத்துக்கும் ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதே?"*

*"அண்மையில் மாநகராட்சிகளின் துணை இயக்குநர் தலைமையில் திண்டுக்கல் மாநகராட்சியில் 2015-16 முதல் 2018 -19 வரை கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது. இதில், வருவாய் மற்றும் முதலீடு, குடிநீர் வழங்கல் நிதி, பாதாள சாக்கடை நிதி மற்றும் தொடக்க கல்வி நிதி ஆகியவற்றிலிருந்து ரூ. 17 கோடி வரை வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ரூ.19,834 மதிப்பு கொண்ட ஒரு குப்பைத் தொட்டியை ரூ.37,750 என்ற வீதத்தில் 137 குப்பைத் தொட்டிகளை ரூ.51,71,750க்கு சென்னையைச் சேர்ந்த சுசி இண்டஸ்ட்ரீஸ் மூலமாக வாங்கியதும், அப்போதைய மாநகராட்சி கமிஷனர் மனோகர், துணை வருவாய் அலுவலர் சாரங்க சரவணன், வருவாய் ஆய்வாளர் ராமச்சந்திரன் ஆகியோர் 1 முதல் 12 வரை உள்ள வார்டுகளில் சொத்துவரியை குறைவாக மதிப்பிட்டு ரூ.18,00,272 முறைகேடு செய்ததும் கண்டறியப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதனடிப்படையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதல் ஊழியர்கள் வரை அனைவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கைப் பதிவு செய்திருக்கிறது. அதேபோல் இந்த ஊழல்கள் நடந்தபோது திண்டுக்கல் மேயராக இருந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த மருதராஜ் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற குரல் அங்கே வலுத்துவருகிறது."*

*"தாசில்தார் ஒருவர் வசூலில் கொடிகட்டிப் பறக்கிறார் என்கிறார்களே?"*

*"சிவகங்கை மாவட்டத் தாலுகா ஒன்றில் தாசில்தாராக பணியாற்றி வருபவர் வெண்ணெய் திருடும் கடவுளின் பெயரைக் கொண்டவர். இவர் பதவி ஏற்றதிலிருந்து வசூலில் கொடிகட்டி பறந்து வருகிறாராம். மணல், சரளைக் குவாரிகள் தொடர்பான உரிமம் ஒருவர் பெயரில் இருக்க, அதை இன்னொருவரை விட்டு நடத்தச்சொல்லும் அவர், 'நீங்க குவாரியை ஓட்டிக்கங்க. எதுவந்தாலும் நான் பாத்துக்குறேன்' என தனியாகச் சிலரைக் களமிறக்கி, மணல் சரளைக் கடத்தலுக்கு துணை போவதாக, கனிமவளத்துறை மூலம் ஆட்சியருக்கு தகவல் சென்றிருக்கின்றது. இருந்தும் ஏனோ அது கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அரசு புறம்போக்கு நிலங்களை வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு இலவசமாக கொடுக்கிறேன் என்கிற பெயரில், ரூ.15 லட்சம் மதிப்புள்ள 3 சென்ட் நிலம், வெறும் ரூ.5 லட்சத்திற்கே' என ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் மலிவு விலையில் விற்று அவர்களுக்கும் இவர் சேவைசெய்து வருகிறாராம்."*



விஜய் மீது புகார் கொடுத்த சரத்குமார்

*"வேற என்ன தகவல் இருக்கு?"*

*"இந்த மாதம் ஓய்வுபெறவிருக்கும் தமிழக டி.ஜி.பி. சங்கர் ஜிவால், தீயணைப்பு வாரியத் தலைவராக நியமிக்கப்பட இருக்கிறார். இதைத் தொடர்ந்து இவருக்கு பெரிய அளவில் பிரிவு உபசாரவிழா தயாராகி வருகிறது. இந்த நிலையில் தற்காலிக டி.ஜி.பி.யாக வெங்கட்ராமன் நியமிக்கப்படவிருக்கிறாராம்."*



டி.ஜி.பி. வெங்கட்ராமன்

"சரிப்பா, நானும் ஒரு முக்கியமான, கவலைக்குரிய ஒரு தகவலைப் பகிர்ந்துக்கறேன். தமிழக அரசு வெளியிடும் அரசாணைகள், அறிவுறுத்தல்கள், கருத்துருக்கள் என எதுவாக இருந்தாலும் தமிழில்தான் வெளியிட வேண்டும் என சில மாதங்களுக்கு முன்பு மிகவும் கடுமையாக அறிவுறுத்தியிருந்தார் ஸ்டாலின். இதற்காக ஒரு அரசாணையும் தமிழில் பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவை ஏற்று அரசுத் துறைகள் அனைத்தும் தமிழில் உத்தரவுகளைப் பிறப்பித்தன. இதை 1 மாதம்தான் அவை கடைபிடித்தன. அதன்பிறகு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் ட்ரான்ஸ்ஃபர் உத்தரவு தவிர மற்ற பெரும்பாலான உத்தரவுகளும் அரசாணைகளும் ஆங்கிலத்திலேயே வெளியிடப்பட்டு வருகின்றன. இது குறித்த புலம்பல்கள் கோட்டையில் எதிரொலிக்கிறது." ●

# அ.தி.மு.க.வில் அதிரடி மாற்றம்!

அ.தி.மு.க.வில் அதிரடி மாற்றங்களை உருவாக்க திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி. 2026 தேர்தல் யாருக்கு எப்படியோ, எடப்பாடிக்கு இது வாழ்வா சாவா போராட்டம் என்கிறார்கள் அ.தி.மு.க.வினர். இந்தத் தேர்தலில் அவர் தன்னை நிரூபிக்காவிட்டால் பா.ஜ.க. அ.தி.மு.க.வை கபளீகரம் செய்துவிடும். அ.தி.மு.க.வின் வாக்குகளை நடிகர் விஜய் பெருமளவில் எடுத்துச் சென்றுவிடுவார். இந்த ஆபத்துகளை சமாளிப்பதற்கு எடப்பாடி வியூகங்கள் அமைத்து செயல்படுகிறார். எடப்பாடியின் சுற்றுப் பயணம் என்பதே அமித்ஷாவின் வருகையை தவிர்ப்பதற்காகத் தொடங்கப்பட்டது. கூட்டணி ஆட்சியில் பங்கு விவகாரத்தில் அமித்ஷாவுக்கும் எடப்பாடிக்கும் இருந்த கருத்து மோதலில் அவரை நேரடியாக சந்தித்தால் பிரச்னை வரும் என்பதற்காகவே எடப்பாடி தனது சுற்றுப்பயணத்தை அறிவித்தார். அப்படி ஆரம்பிக்கப்பட்ட சுற்றுப்பயணம் எடப்பாடிக்கு ஒரு பெரிய நல்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அ.தி.மு.க.வின் குறுநில மன்னர்களாக முன்னாள் அமைச்சர்களால் அக்கட்சி நிர்வகிக்கப்பட்டு வந்தது. அவர்கள் எம்.எல்.ஏ.க்களை கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு எடப்பாடியை மிரட்டிக்கொண்டிருந்தார்கள். இந்த மிரட்டல்களின் பின்னணியில் ஓ.பி.எஸ்., சசிகலா என ஒரு கும்பலே



www.nakkheeran.in

இருந்தது. சசிகலாவை கட்சியில் இணைக்க வேண்டும், ஓ.பி.எஸ்.ஸுக்கு பொருளாளர் பதவி கொடுக்கவேண்டும் என ஏகப்பட்ட டிமாண்டுகள் எழுந்தன. ஒரு கட்டத்தில் செங்கோட்டையன் நேரடியாகவே எடப்பாடியை மிரட்டினார். அத்துடன் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், நிர்மலா சீதாராமனை பார்ப்பது.. அமித்ஷாவிடம் பேசுவது, பியூஷ் கோயலிடம் கெஞ்சுவது என வெளிப்படையாகவே எடப்பாடிக்கு எதிராகக் கலகம் ஆடினார்கள். அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணி ஆட்சி, எடப்பாடி அல்லாத ஒருவர் முதலமைச்சர், இரண்டரை வருடம் பா.ஜ.க. ஆட்சி.. இரண்டரை வருடம் அ.தி.மு.க. ஆட்சி என்றெல்லாம் டீல் பேசப்பட்டது. இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த எடப்பாடி இதற்கெல்லாம் முடிவு கட்ட இந்த சுற்றுப்பயணத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டார். குறுநில மன்னர்களாக இருந்த முன்னாள் அமைச்சர்களிடம் சுற்றுப் பயணப் பொறுப்பை ஒப்படைக்காமல், அவர்களால் நசுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகளிடம் பொறுப்பையும் பணத்தையும் கொடுத்தார். முன்னாள் அமைச்சர்களில் பலர் சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு தலைகாட்டாமல் இருந்தாலும், அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் அடுத்த எம்.எல்.ஏ. சீட் தங்களுக்கு கிடைக்கும் என அ.தி.மு.க.வினரை திரட்டிக்கொண்டு வந்தார்கள்.

உளுந்தூர்பேட்டையில் மாவட்ட மாஜிக்கள் சண்முகமும், தங்கமணியும் எடப்பாடியின் பொதுக்கூட்டத்தை புறக்கணித்தார்கள். ஆனாலும் பெருங்கூட்டத்தை கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் கூட்டினார். கடலூரில் எம்.சி.சம்பத் என்கிற முன்னாள் அமைச்சரை மீறி சத்தியா பன்னீர்செல்வம் என்கிற மாவட்ட நிர்வாகி மாநாடுபோல் கூட்டத்தைக் கூட்டினார். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு பெரிய டீமுடன் செல்லும் எடப்பாடி, லோக்கல் பிரச்னைகள் அனைத்தையும் அந்த டீம் வழியாகத் திரட்டி அதை தனது உரைகளில் புகுத்தியதோடு, பக்கத்தில் உள்ள தொண்டர்களைக் கேள்வி கேட்டு, பதில் சொல்ல வைத்து வித்தியாசமாக தனது உரைகளை வடிவமைத்தார். நான் பழைய பழனிச்சாமி அல்ல புதிய பழனிச்சாமி என்கிற வீச்சில் அமைந்தன அவரது உரைகள். அத்துடன் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள அ.ம.மு.க. தலைவர்கள் மற்றும் தொண்டர்களுடன் கலந்துரையாடல் நடத்தி அவர்களை அ.தி.மு.க.விற்கு கொண்டுவரும்



வேலைகளையும் செய்தார். டி.டி.வி. தினகரனிடமும், ஓ.பி.எஸ்.ஸிடமும் இருவருக்கும் நெருக்கமானவர்கள் மூலம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

எடப்பாடிக்கு எதிரான அதிருப்தி கும்பலை தலைமைதாங்கி வழிநடத்தி வந்த பா.ஜ.க.வின் முன்னாள் மாநிலத் தலைவரைக் கட்டுப்படுத்த அமித்ஷாவிடம் பேசினார். அமித்ஷா, பா.ஜ.க.வின் மு.மா. தலைவர் வாயாலேயே எடப்பாடியை புகழவைத்தார். ஓ.பி.எஸ்.ஸும், டி.டி.வி.யும் வரும் சட்டமன்றத் தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை என்கிற உறுதியை எடப்பாடிக்கு கொடுத்திருக்கிறார்கள் என்கிறது அ.தி.மு.க. வட்டாரங்கள். நான் அ.தி.மு.க.வை ஆதரித்துதான் ஓட்டு கேட்பேன் என விஜய்யை விமர்சித்து ஓ.பி.எஸ். பேசிய பேச்சு, எடப்பாடி நடத்திய பேச்சுவார்த்தைகளின் எதிரொலி என்கிறார்கள் அ.தி.மு.க.வினர். ஆனால், பா.ஜ.க.வினர் எங்களுக்கு நூறு சீட்டுகள் வேண்டும் என அடம்பிடிக்கிறார்கள். அவர்களின் அந்த எண்ணிக்கையை கரைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார் எடப்பாடி. எந்த சூழ்நிலையிலும் அ.தி.மு.க. தனது சுய தகுதியை இழந்துவிடாது என, தனக்கு நெருக்கமானவர்களிடம் சொல்லிவரும் எடப்பாடி, 75 வயதிலும் அதற்காக கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார் என்கிறார்கள் அவருக்கு நெருக்கமானவர்கள். இந்த முயற்சியில் எடப்பாடிக்கு பின்னடைவுகள் இல்லாமல் இல்லை.

பா.ஜ.க. நூறு சீட் கேட்டு அடம்பிடிப்பதை, கூட்டணி ஆட்சி என்று ஆட்சியில் பங்கு கேட்பதை எப்படி சமாளிக்கப் போகிறார் எடப்பாடி என்பதை அ.தி.மு.க.வினரே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். அதேபோல் எடப்பாடிக்கும் சசிகலாவுக்கும் ஒத்துவரவில்லை. எடப்பாடியை வீழ்த்தியே தீருவேன் என சசிகலா கொக்கரிப்பதை எடப்பாடி எப்படி சமாளிப்பார் என்பதைப் பொறுத்துதான் அ.தி.மு.க.வின் வெற்றி, தோல்வி அமையும் என்கிறார்கள் அரசியல் கூர்நோக்கர்கள்.

**-தாமோதரன் பிரகாஷ்**

www.nakkheeran.in

PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday

